www.tamilarangam.net

# ஈழம்




நாம் ஈழவர் நமது மொழி தமிழ் நம் நாடு ஈழம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கண்டெடுத்து விட்டோம்!

சென்ற வருடத்தின்-
ஏழாம் மாதத்தை எண்ணிப் பாருங்கள்
ஆதிக்கக் கரங்களின் அக்கிரமத் தனங்கள்
அப்போது உங்கள்-
நெஞ்சுக்குப் புரியும்.

"நாளை......
என்னைப் பெற்றவளைப் பார்ப்பேன்;
என் மனைவியைக் காண்பேன்;
என்
தோழனைச் சந்தித்து-
அகமகிழ்ந்து உரையாடுவேன்;
என் பச்சிளம் சிறார்களை-
பாசமுடன் அரவணைப்பேன்;

இவர்களைவிட......
நிச்சயமாக......
சுதந்திர ஈழத்தைக் காண்பேன்.

இன்று......
நான் ஒரு சிறைக் கைதி
நாளைய விடியலில்
சுதந்திர ஈழத்தின் சிட்டுக் குருவி."
என்றது-
எங்களது அரசியல் தோழர்களின்
அசையாத சிந்தனை.

எத்தனை வதைகளிலும்
ஆட்டம் காணாத
அந்த-
உத்தம தோழர்களின்
ஒற்றுமையான சிந்தனையால்
ஆட்டம் கண்டன
ஆயுதக் கும்பல்கள்.

அதனால்...
பட்டாளத்துச் சிப்பாய்களால்
கொட்டடி யோரத்துச்
சிறைக் கதவுகள் உடைக்கப்பட்டன.

குருஷேத்திரக் களத்தில்-
நிராயுத பாணிகளாய் எங்கள் தோழர்கள்

இந்து சமுத்திரம்
இரத்தக் கடலாகி
வங்கக் கரையிலும், அரபுக் கரையிலும்
அலைமோதி நின்றது.

குருஷேத்திரக் களத்தில்
சுருண்டு விழுந்த எங்கள் கரங்களில்—
சிக்கிய
செல்வத்தைப் பார்த்தோம்

நிமிர்ந்து எழுந்தோம்......
சிக்கியது வேறெதுவுமல்ல
முன்னர்
எங்களது மூதாதையர் தொலைத்த
அம்பும் வில்லும் தான்.

மரணத்தில் வாழும்
எண்ணத்தை மாற்றிக் கொண்டோம்.
ஏனெனில்......
இனிமேல் தொடரும்
போரினில் வாழ்வதற்காய்.

-யோகவாணி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஈழம்

ஈழப் புரட்சி அமைப்பின்
வெளியீடு

மலர் 1 : இதழ் 8

01-09-84

அன்பளிப்பு: 2 ரூபாய்

அட்டை ஓவியம்:
ருத்திரன்

தொடர்புக்கு :
ஈழம்
த. பெ. எண். 2356
சென்னை-600 024.

அச்சிட்டோர் :
விசாலம் பிரிண்டிங் ஹவுஸ்
எண் : 2, 2-வது தெரு,
டாக்டர் சுப்பராயன் நகர்
சென்னை-600024.

# எதிரொலி

போராட்டம் தொடங்கி விட்டதா? ஈழத்தில் இன்று நடந்து கொண்டிருப்பதுதான் என்ன? மக்கள் கொல்லப்படவும்- நகரங்கள், கிராமங்கள் எரிக்கப் படவும்- சொத்துக்கள் அழிக்கப்படவுமான நிகழ்வுகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

ஸ்ரீலங்கா இராணுவம், கடற்படை தாக்கப்படுகின்றது. போராளிகள் கொல்லப்படுகின்றனர், இளைஞர்கள் கைது செய்யப்படுகின்றனர். இந்த நிகழ்வுகள் போராட்டம் ஒன்றிற்கான தன்மையையே வெளிப்படுத்துகின்றன. ஆனால் இன்று நடப்பது போராட்டம்தானா? இக் கேள்விக்கானபதில் தெளிவாக்கப்பட்டால்தான் இன்றைய நிலைமைகளை புரிந்து கொள்ளமுடியும்.

தகவல்- தரவுகளின்படி, ''தமிழீழ விடுதலைப்புலிகள்'' என்னும் இபக்கமே தற்போதைய நிலைமையின் தொடர்பாளர்கள். கடற்படையால் தாக்கப்பட்டதும்- கடற்படை படகை தாக்கியதும் பொலிகண்டியில் இராணுவ வாகனத்தை தகர்த்ததும்- ஒட்டிசுட்டான் காவல் நிலையத்தை தாக்கியதும். தாங்களே என பொறுப்பேற்றுள்ளனர். விளைவுகளாய் ஸ்ரீலங்கா இராணுவம் மூர்க்கத்தனமாய் தாக்கிக் கொண்டிருக்கின்றது. மேலே குறிப்பிட்ட சம்பவங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

ஈழப்போராட்டத்தை முன்னெடுப்பதற்காக பிரதான ஐந்து இயக்கங்கள் இயங்குகின்றன. தமிழீழ விடுதலை இயக்கம் (TELO) ஈழப்புரட்சி அமைப்பு (EROS) ஈழமக்கள் புரட்சிகர விடுதலைமுன்னணி( EPRLE) தமிழீழமக்கள் விடுதலைக்கழகம் (PLOT) தமிழீழ விடுதலைப்புலிகள் (LTTE) இவை தவிர்ந்த வேறு குழுக்களும் இயங்குகின்றன. ஆனால் தற்போதைய அவலநிகழ்வில் விடுதலைப்புலிகள் தவிர்ந்தவேறுஇயக்கக்கள் பங்கேற்கவில்லை. அத்துடன் மக்கள் எந்தளவில் பங்கேற்றுள்ளனர் என்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்- போராட்டம் என்பதன் அடிப்படையே மக்கள் சார்ந்த உணர்வும் வெளிப்பாடுமேயாகும்-ஆனால் ஆண்மைய இச் சம்பவங்களின் போது மக்கள் கோபம்கொண்டு எழுந்தவர்களாய் காணப்படவில்லை- தம்மீதான அடக்கு முறைக்கு எதிராக கல்தூக்கிவீசி இராணுவ வாகனத்தின் நடமாட்ட வழிகளை மறித்து தம் பாரம்பரிய ஆயுதங்களுடன் எழுச்சி கொண்ட தன்மை 1981, 1983 போன்ற இராணுவ அடக்கு முறையின் போதும், ஏன் தற்போதும் கூட காணப்படவில்லை- அடக்குமுறைகள் அதிகரித்த போதெல்லாம் கதவுகளை மூடி மூலையில் முடங்குவதும் கோயில்கள், பள்ளிக் கூடங்களில் தஞ்சம் புகுவதும் கடல் கடந்த நாடுகளுக்கு தப்பிச் செல்வதும் போன்றவைதான் தொடர்ந்த நடைமுறைகளாய்க்காணப்படுகின்றன- ஒவ்வொரு அடக்குமுறைக்களின் பின்னை காலக்கட்டங்களில் வெளிநாடு செல்வோரின்து தொகை அதிகரித்த வண்ணமே காணப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படுகின்றது. 1983 யூலையின்பின் 40,000 பேர் இந்தியாவுக்கு அகதிகளாய் வந்துள்ளதாக இந்திய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது- இவைபோன்ற காரணத்தால் நம் 'போராட்டம் தொடங்கிவிட்டதா? என்ற கேள்வியை எழுப்பினோம். ஏனெனில் இக்கேள்விக்கான விடை வேறுபட்டாலும் கருத்துக்கள், நடைமுறைகள் தந்துரோபாய மாறுபாடுகளாலுமேதான் ஈழத்தில் இன்று வேறுபட்ட பல இயக்கங்கள் காணப்படுகின்றன.

இந்தவகையில், 'ஆயுதம் முன்செல்ல போராட்டம் பின்தொருடம்' என்ற உணர்ச்சிப் போக்குடைய வர்களாகவும், போராட்டத்தின் பின்புலமாக ஆயுதம் இருக்குமென்ற உணர்வு பூர்வமான விஞ்ஞானக் கண்ணோட்டப் போக்குடையவர்களாகவும் இருவகைகளில்போராட்ட நெறிப்படுத்தலில் உள்ள இயக்கங்களை வேறுபடுத்தலாம்- இதில் 'விடுதலைப்புலிகள்' உணர்ச்சிப்போக்குடைய நடைமுறையில் செயற்படுவர்கள் என்பது வெளிப்படையாகின்றது- இதனல் சமூக உழைச்சல்களில் சிக்கியுள்ள மக்களை பாதிப்புள்ளாக்கி ஒதுங்கவைத்து கையாலாகாத வெறும் பார்வையாளர்களாக மாற்றிடும் பேரபாயம் ஏற்படுகின்றது. கெரில்லா முறையிலான இராணுத்தாக்குதல்களை மேற்கொள்ளும் இவர்கள் அரசை ஸ்தம்பிதமடையாத தாக்கல்களைச் செய்வதனல் எதுவிதமான பிரயோசனங்களும் இல்லை என்பதை ஒத்துக்கொள்ளவேண்டும். வெறும் கூலிப் படையினருக்கெதிரான இராணவத்தாக்குதல்களை விடுத்து அரசுக்கெதிரான அரசியல் மயப்படுத்திய இராணுவ கெரில்லாத்தாக்குதல்களை மேற்கொள்ளவேண்டும் ஏனெனில்வெறுந்தாக்குதல் நடைமுறைகள் புதியவிகாரமான பக்கவிளைவுகளின் பாய்ச்சல்களில் ஈழவரைக் கொண்டு போய்விட்டுவிடும் அபாயம் உண்டு. அப்படியான ஒரு நிலையைக்கூட இன்று, வெற்றுத்தனை வெளிப்படுத்திய ஜனநாயக அமைப்பான த. வி. கூ இன்ரை தூக்கிநிறுத்தியதுடன் அடக்குமுறை உச்சக்கட்ட அரங்கேற்றத்தின்பின் கூட்டப்பட்ட வட்டமேசைப்பேச்சுவார்த்தையில் ஸ்ரீலங்கா அரசால் வழங்கப்படும் ''இரண்டாம் சபை'' (Second Chamber) போராட்டத்தைப் பின்னடை வைக்கும் சபையை- ஏற்றுக்கொள்ள வைக்கும் நிலையை ஏற்படுத்தியுள்ளது. எதிர்காலப் போராட்ட நடவடிக்கைகளுக்கு பலவிதமான சில்கல்களை உண்டு பண்ண விருக்கும் இந்த மாதிரியான தாக்குதல்கள் தொடரவேண்டுமா?

எம்மைப் பொறுத்தவரையில், அரச அட்டூழிய ஆக்கிரமிப்புகளைக்கண்டு சகிக்க முடியாத நிலையில் மக்கள் கிளர்ந்தெழுந்து போராடமுனையும் போது அம்மக்கள் எழுச்சியினை மட்டுப்படுத்த முயலும் சக்திகளை தாக்கமேற்கொள்ளும் நடவடிக்கைகளையே 'போராட்டம்' என்பதை உறுதியாக தெரிவிக்கின்றோம்.

எனவேதான், இந்த தயாரிப்புக்கான மக்களை பொதுமைப்படுத்திய எழுச்சி அணிவகுப்பில் கிளர்ந்தெழுவைக்கவேண்டிய செயல்பாடுகளை விரைந்து செய்கிறோம். வரலாற்றை படைக்கும் அந்த மக்கள் பங்காளிகளாக செயல் படும்போது ஈழம் என்பது வெடித்துக் கிளம்பும்; இந்த நிகழ்வுக்கு ஒரு முற்போக்குச் சக்தியாகவும் முன்னெடுத்துச் செல்லும் ஒரு காரணியாகவும் எமது இயக்கம் தன்னாலான பங்களிப்பைச் செய்யும்.

அன்பளிப்பு தொகை :

இந்தியாவிற்குள்

| | |
|---|---|
| தனி இதழ் | 2 ரூபாய் |
| 6 மாதம் | 12 ரூபாய் |
| ஒரு வருடம் | 20 ரூபாய் |

தொடர்பு முகவரி :

க. பாலன்

10, கங்காராம்தோட்டம்,

சென்னை-600 024

அடுத்த எமது வெளியீடு!

## ஈழவர் இடர்தீர...

தமிழ்பேசும் மக்களின் அடிப்படைப் பிரச்சினையை ஆய்ந்து தீர்க்கமான தீர்வொன்றை முன்வைத்த வெளியீடே

ஈழவர் இடர்தீர...

1975 முதல் வெளிப்பட்ட ஈரோஸ் கருத்துக்களின் தொகுப்பை இதில் காணலாம். ''ஈழவர் இடர்தீர''... இதற்கு முன்னர் ஒரு பகுதி வெளிவந்திருந்தது. இப்பகுதியும், 'தர்க்கீகம்' பத்திரிகையில் தொடர்ச்சியாக வெளிவந்த ஏனைய பகுதிகளும் இணைக்கப்பெற்றதே புதிய இத்தொகுப்பு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தாக்குதல் தொடுக்கும் இயக்கங்களின் இராணுவ தந்திரோபாயம் பொருத்தமானதா?

"இது ஒரு தொடர்போரின் ஆரம்பமே! இதற்குமேல் எதுவும் சொல்வதற்கில்லை"
-அமிருக்கு ஜயவர்த்தனவின் பதில்

"போர் என்றால் போர்! சமாதானம் என்றால் சமாதானம்" என வானொலி மூலம் ஒலித்த அதே குரல் மீண்டும் ஒலித்தது. இப்போது இது ஒருபடி மேலே போய் சமாதானத்தைக்குலைத்து விட்டு போர் முனைக்கு வந்து விட்டது.

நாளுக்கு நாள் பத்து, இருபது, முப்பதாக தெருவோரங்களில் பிணங்கள் குவிக்கப்படுகின்றன. குடாநாட்டிற்குள் தமிழ் பேசும் மக்கள் 'தீவிரவாதிகளின்' பெயரால் சுட்டு வீழ்த்தப் படுகிறார்கள். குடிசைகள் முதல் மாடிகள்வரை பாரிய குண்டுத் தாக்குதல்களுக்கு இரையாகின்றன.

மறுபக்கத்தில்ஆயுதம்தரித்தஇளைஞர்கள்ஆங்காங்கே அதிரடித்தாக்குதல் தொடுக்கின்றனர். வல்வெட்டித்துறை,சுன்னாகம்,ஊர்காவற்துறை ஒட்டிசுட்டான் வவுனியா, மன்னார், முளங்காவில்... இன்னும் சில இடங்களில் இளைஞர்கள் இராணுவ- பொலிஸ் படைகள் மீது மோதி விட்டு ஓடிமறைந்து விடுகின்றனர். இவர்கள் இப்படியேபரவலாகத்தாக்கிவடக்கிலிருந்துஇராணுவத்தை துரத்திவிடத் துடிக்கிறார்கள். இதுவே அநேக ஆயுதந் தரித்தஇளைஞர்இயக்கங்களின் இராணுவ தந்திரோபாயமாக இருக்கிறது.

ஆனால், சாதாரண மக்களோ வெறிபிடித்த இராணுவத்திற்கும், போராடும் இளைஞர்களுக்கும் இடையே நின்று திக்குமுக்காடுகிறார்கள். சில இளைஞர்கள் இராணுவம் மீது பாய்ந்து தாக்கியதும் மக்களுக்கு ஏன் எதற்காக இது நடந்ததென தெரிவதில்லை. வெடிச் சத்தங்கள் கேட்டதும் தமக்கு ஆபத்து வந்து விட்டதாக எண்ணி பதற்றப்படுகிறார்கள். இருப்பிடங்களை விட்டு எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக இடம் பெயர்ந்து விடுகிறார்கள்.

இவ்வாறு பீதியுடனும் பதற்றத்துடனும் இருக்கும் அப்பாவி மக்களையே பயங்கரவாதிகளாக்கி, ஆத்திரமும் வெறியுமாக வீதிகளில் வரும் இராணுவம் சுட்டு வீழ்த்துகிறது. அவர்களது உடைமைகளை சூறையாடுகிறது; தீ வைத்து தணலாக்குகின்றது. இதைத்தான் ஜயவர்த்தன 'போர்' எனக்கூறி பெருமிதமடைகிறார்; இதுவே அவரது 'போர்த் தந்திரமும்' கூட.

இத்தகைய இக்கட்டான நிலையில் இயக்கங்களின் இராணுவத் தந்திரோபாயம் தமிழ் மக்களை சீரான வாழ்வுக்கு கொண்டு வரப் போகிறதா? அல்லது ஜயவர்த்தனவின் போர்த் தந்திரத்'திற்கு எண்ணெய் வார்த்து சீரழிக்கப் போகிறதா? இந்தக் கேள்விகளே இன்று'தமிழ் மக்கள் முன்னுள்ளன. இம்மக்கள் இப்போதெல்லாம் தமது எதிர்காலத்தைப்பற்றி அதிகம் அக்கறைப் படுவதில்லை. ஏனெனில் நிகழ் காலமே இவர்களுக்கு சூனியமாகிப் போயிருக்கிறது.

**ஜயவர்த்தனவின் தந்திரப் போக்கு...**

தமிழ் பேசும் மக்களுக்கு என்ன தீர்வு கொடுக்கப்பட வேண்டுமென்பதை ஜயவர்த்தனவும் சகபாடிகளும் எப்போதே தீர்மானித்து விட்டார்கள். இம்மக்களைவேரோடு சாய்த்துவிட வேண்டுமென்பதில் என்றைக்கும் மாற்றம் வரப் போவதில்லை இதற்கிசைவாக சந்தர்ப்பங்களை உருவாக்குவதிலும், பயன்படுத்துவதிலும்தான் அரசு வட்டாரங்கள் சிரத்தை கொண்டுள்ளன. அண்மைக் காலங்களில் அரசியல் ரீதியிலும், இராணுவ ரீதியிலும் அரசு மேற்கொண்டுள்ள போக்கை அவசியம் நாம் அவதானித்தல் வேண்டும்.

'இந்தியா படையெடுப்பிற்கு தயாராகி வருகிறது.' என்பதே பிரேமதாசாவின் தாரக மந்திரம். இதற்கு ஆதாரம் கிடைத்ததோ என்னவோ, அரசியல் மட்டங்களில மட்டுமல்லாது சாதாரண சிங்கள மக்கள் மத்தியிலும் இப்பீதி பரப்பப்பட்டு விட்டது.

அத்துடன் [ஜயவர்த்தன இந்தியத் தலையீட்டிற்கு] வாய்ப்புக் கொடுக்கக்கூடிய

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


'துரும்பை' அடையாளங் கண்டு செயற்பட ஆரம்பித்திருக்கிறார். திடீரென அவருக்கு மலையக மக்கள் மீது மோகமும், பற்றும் வந்து விட்டது. பல அபிவிருத்தித் திட்டங்களும், சம்பள உயர்வுகளும், விசேட சலுகைகளும் வழங்கப் போவதாக செய்திகளை கிளப்பிவிட்டிருக்கிறார். மலையகத்தில் அமைதியை நிலைநாட்ட வேண்டியது இந்தியப் படையெடுப்பை தடைசெய்யும் ஒரு முக்கிய காரணியாகக் கருதப்பட்டுள்ளது.

அதே வேளை கிழக்குமாகாணப் பகுதிகளில் இடைத்தேர்தல் நடாத்தி தமக்கு சார்பானவர்களை பாராளுமன்றத்துக்குள் புகுத்த எத்தனிக்கப்படுகிறது. இன்று தமிழர் கூட்டணிக்குவிதித்திருக்கும் தேர்தல் முட்டுக்கட்டையை இதற்கு பயன்படுத்தப் போகிறது அரசு. வேறொரு பக்கத்தால் சிங்கள குடியேற்றக் கிராமங்களில் சிங்கள இளைஞருக்கும் யுவதியருக்கும் துப்பாக்கி சுடும் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. இந்த இருவகை கையாளல மூலம் கிழக்கில் தமிழ் குரல்களை அமுக்கி அழிக்க முனைந்திருப்பது வெளிச்சமாகி விட்டது.

இறுதியாக, வடபகுதி குழப்ப நிலைகளை தீர்ப்பதற்கு தான்பிசாசுகளிடமும் உதவிகோரத் தயார் என்றார் ஜயவர்த்தன. அமெரிக்க பிரித்தானியப் பின்னணியில் இஸ்ரேலிய 'மொசாத்' இவருக்கு கைகொடுத்திருக்கிறது.மொசாத்தினுடைய அணுகு முறைகள் மர்மமானவைகளல்ல. சர்வதேச அரங்கில் இவர்களின் தந்திரோபாயங்கள் மிகவும் மலிந்தவை. இவர்களின் கைவண்ணத்தில் பாலஸ்தீனரின் உருக்குலைந்த வாழ்க்கை நாள்தோறும் உலகில் எதிரொலித்துக் கொண்டிருக்கிறது. பீரங்கிகளாலும், போர் விமானங்களாலும், போர்க் கப்பல்களினாலும் அப்பாவிகள் மீது குண்டுவீசிக் கொன்று குவிப்பதன் மூலம் ஆயுத கிளர்ச்சிகளை ஒடுக்கிவிடலாமென்பதில் இவர்கள் அசையாத நம்பிக்கை உடையவர்கள். அகதிகளாக வாழும் பாலஸ்தீனர்மீது இஸ்ரேலிய படைகள் தாக்குதல் தொடுக்கும்போது முன்னாள் பிரதமர் பெகின் போர் நடப்பதாக வர்ணிப்பது வழக்கம். அந்த அடிச் சுவட்டிலேயே ஆயுதமற்ற மக்கள்மீது இராணுவத்தை ஏவிவிட்டு ஒருதொடர்போரை ஆரம்பித்திருக்கிறார் ஜயவர்த்தன

**வடக்கிலிருந்து வரும் வாய்ப்புகள்**

'வடக்கை விட்டு இராணுவமே வெளியேறிவிடு' என்பதே அநேக ஆயுதந்தரித்த இயக்கங்களின் இன்றைய கோஷம். தமது இறுதி இலட்சியமான தமிழ் ஈழத்தை அடைவதற்கு இவ் வெளியேற்றமே முதன்மையான படி ஆகக் கருதி செயற்படுகிறார்கள். இவர்களது சிந்தனைப் படி... வடபகுதியில் நிலை கொண்டுள்ள இராணுவம் மீது அவ்வப்போதும், அடர்த்தியாகவும் அதிரடித் தாக்குதல்களை தொடுக்கவேண்டும். இதன் மூலம் இராணுவம் கிலிகொள்ளும். நிர்வாகம் நிலைகுலையும். கண் துடைப்புப் பேச்சு வார்த்தைகள் குழம்பும். ஒரு நாள் இராணுவம் வடக்கைவிட்டு ஓடிவிடும்... அப்போதுவடக்கு விடுதலையாகிவிடும். இவ்வாறே இயக்க இளைஞர்கள் சிந்திக்கிறார்கள்.



தனது உடமைகளுடன் இடம் பெயரும் வயதான பெண்

ஆனால் கடந்த கால அனுபவங்களோ எமக்கு இந்த சிந்தனையை ஒப்புக்கொள்ள மறுக்கிறது. ஆரம்பத்தில்இவர்கள் சில பொலிஸ் நிலையங்கள் மீது தாக்கினர். இராணுவத்திடம் வடக்கின் பாதுகாப்புஒப்படைக்கப்பட்டது.பின் இராணுவம் மீது தீவிரமாகத்தாக்கினர். இராணுவம்மேலும் குவிக்கப்பட்டது;பாதுகாப்புச்சட்டங்கள் இறுக்கப்பட்டன; நவீன போர்க் கருவிகள் இறக்குமதி செய்யப்பட்டு வழங்கப்பட்டன. நவீன முறை பயிற்சிகள் அளிக்கப்பட்டன. புதிய ரோந்து முறைகளும், புலன் விசாரணைகளும் முடுக்கிவிடப் பட்டன. இறுதியாக மொசாத்தும், பிரித்தானிய கூலிப் படைகளும் அழைக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறு இராணுவ ரீதியில் அரசு வலிமையடைந்து வருவதுடன் பிரத்தியேக பாதுகாப்பு அமைச்சொன்றையும், நிதியம் ஒன்றையும் நிறுவி அதனூடாக இனிமேல் தனக்கு சார்பான வெளிநாட்டுதவிகளையும் பெற்றுக் கொள்ளவும் வகை செய்யப்பட்டுள்ளது. அரசின் பிற்போக்கான பொருளாதாரத் திட்டங்களையும தவறான போக்குகளையும் உணர்ந்து நோர்வே, சுவீடன் டென்மார்க் போன்ற நாடுகள் பொருளாதார



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

உதவிகளை நிறுத்த ஆரம்பித்திருக்கின்றன. இதனால் வந்துள்ள நெருக்கடிகளை சமாளிக்க தற்போது ஜயவர்த்தன நிர்வாகம் பாதுகாப்பு அமைச்சை பயன்படுத்த திட்டம் தீட்டியுள்ளது. 'வடக்கில் பயங்கரவாதம்' என ஒப்பாரி வைத்து அமெரிக்கா, தென்னாபிரிக்கா, பிரித்தானியா, ஸ்பெயின், பாக்கிஸ்தான், தென் கொரியா ஆகிய நாடுகளிடமிருந்து ஆயுதநிதி உதவிகளைப் பெற ஆரம்பித்திருக்கிறது.

இவை மட்டுமல்லாமல், 'இதோ பயங்கரவாதிகள்' என பூச்சாண்டி, காட்டி மக்கள் மீது பொருளாதார சுமைகளை ஏற்றவும், தனக்குள்ளிருக்கும் பூசல்களை ஒட்டுப்போடவும் அரசுக்கு ஆயுதந்தரித்த இளைஞர்களின் தாக்குதல்கள் வாய்ப்பாக அமைகின்றன.

இந்த வாய்ப்புகளூடாக வடக்கில் நடக்கும் எந்தத் தாக்குதல்களுக்கும் இராணுவ வெறியூட்டி பதிலடி கொடுப்பதற்கு கொழும்பிலுள்ள அரச நிர்வாகத்துக்கு எந்தவித இடையூறும் இல்லை. இந்த ஸ்திரத் தன்மையே அரசியல் ரீதியில் தமிழ் பேசும் மக்கள் மீது எதையும் திணிப்பதற்கு வழிவிட்டுக் கொடுத்திருக்கிறது. ஜயவர்த்தன அரசு பெற்றுள்ள இத்தகைய ஸ்திரத் தன்மைதான் இயக்கங்கள் கையாளும் இராணுவ தந்திரோபாயத்தின் பலவீனம்.

இதில் இன்னொரு விடயம் என்னவென்றால் இயக்கங்கள் திடீர்த்தாக்குதல்கள் தொடுத்ததும் பிறக்கும் புதிய அரசியல் சூழலில் தமிழ் மக்களின் குரலாக தமிழர் கூட்டணியே விளங்குகிறது. இந்த நிலைமையை மாற்றி, இயக்கங்கள் அதனை சுவீகரித்துக் கொள்ளுமளவுக்கு, அரசியல் அம்சங்களுடன் இராணுவத் தாக்குதல்கள் பின்னிப் பிணையவில்லை.

சுருக்கமாகச் சொல்லுமிடத்து அரசியல் அம்சம் பொருந்தாத இராணுவ நடவடிக்கைகள், கூட்டணியின் அரசியல் தலைமை, அரசாங்கத்தின் ஸ்திரப்பாடு ஆகிய மூன்று முனைகளுமே இன்று தமிழ்பேசும் மக்களின் நிகழ்காலத்தை கேள்விக் குறியாக்கி இருக்கின்றன.

இந்த இருண்ட நிலைமையைப் போக்க நாம் இப்போது செய்ய வேண்டியது 'அரசியல் தொனிப்புள்ள புதிய இராணுவ உபாயங்களூடாக சிங்கள அரசாங்கத்தை நேரடியாக நிலைகுலையச் செய்யும் நடவடிக்கைகளே! ○



"ஈழவரைக் கொல்லாதே" எனக் கோஷமிட்டவாறு இராமேஸ்வரம் மாணவர்கள் முன்னெடுத்த ஊர்வலத்தின் ஒரு தோற்றம்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# போராட்ட முன்னெடுப்பும்

# சாதியப் பிரச்சனைகளும்

**சாதித் தீயை பின்னணியாக வைத்து தனது பிரச்சார சாதனங்களை முடுக்கி விட்டிருக்கிறது ஸ்ரீலங்கா அரசு. இது நமக்கு கசப்பை ஊட்டி இருக்கலாம் ஆனால் ஈழப் போராட்டத்தில் அக்கறையுள்ளோர் இதனைப் புறக்கணித்து விட முடியுமா?**

"தமிழ் பேசும் மக்கள் தங்களுக்கு என் ஒரு அரசை வென்றெடுப்பதற்காக முயற்சிகள் பல செய்கின்றனர். இந்த முயற்சியில் எவ்வளவு தூரம் இவர்கள் வெற்றி அடைவார்கள் என தற்போது யாரும் ஆருடம் சொல்ல முடியாது. ஆனால் எந்த அரசுக்குக் கீழும் ஒடுக்கப்பட்ட மக்களின் எதிர்காலம் எப்படி அமையப் போகிறது என்பதுதான் இன்று கேள்வியாகும்."

இவ்வண்ணம் 13.7.84 இல் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தினால் வெளியிடப்பட்ட துண்டு பிரசுரம் கேள்வியை எழுப்புகிறது. போராட்டம் கூர்மை அடைந்துள்ளது- முன்னேறிச்செல்கின்றது என்று கணிப்பிட்டுக் கொண்டிருக்கும் இவ்வேளையில் தமிழ் பேசும் மக்களின் ஒரு பகுதியினரிடம் இருந்து உரத்த குரல் இவ்வாறு ஒலிக்கிறது; தமிழ் மக்கள் அரசை வென்றெடுக்கப் போகின்றார்கள், அதில் தாங்கள் என்ன பதவியை ஏற்கலாம் என தடல்புடலான ஏற்பாடுகளுடன் கனவுகண்டுகொண்டிருப்போர் ஒருபுறமும்; நியுயோர்க்கிலும் சென்னையிலும் மகாநாடுகள் கூட்டி தீர்மானங்கள் நிறைவேற்றுவோர் இன்னொரு புறமுமாக கச்சையை வரிந்து கட்டிக் கொண்டு முனைந்து நிற்கையில் இப்படியொரு குரல் ஈழத்தின் மூலை முடுக்கில் இருந்து ஒலிக்கத் தொடங்கியுள்ளது. இக்குரல் பலரின் காதுகளைச்சென்றடையாமல் சப்தவேட்டுக்களாக அமுங்கிக் கொண்டிருக்கையில், பலர்கேட்டும் காதுகளை மூடிக் கொண்டுள்ளனர்

இந்தக்குரல்களின் பின்னணியை வைத்தே அண்மையில் ஸ்ரீலங்கா அரசு தன் பிரச்சாரத்தினை பயன்படுத்திக் கொண்டது. சிங்கள அரசு இதனைக் கூறியது நமக்குக் கசப்பாக இருந்திருக்கலாம். ஆனால் ஈழப் போராட்டத்தில் அக்கறையுள்ளோர் இதனைப் புறக்கணித்துவிட முடியாது.

தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரலைக் காட்டி ஸ்ரீலங்கா அரசு சிங்கள மக்களின் வர்க்க முரண்பாட்டை மறைத்து வைத்திருப்பது போல் ஸ்ரீலங்கா அரசின் இன ஒடுக்குமுறையைக்காட்டி தமிழ் பேசும் மக்களின் உள்முரண்பாட்டை, சாதிய வெறியை மறைத்துவிட எத்தனிப்பதும் பேதமையாகும். நிலப்பிரபுத்துவத்தின் குணாம்சமான சாதியப் பிரிவானது யாழ் குடாநாட்டினுள் இறுக்கமாய் இருந்தது என்பதை மறுக்க முடியாது. ஆனால் தேசிய இன ஒடுக்கு முறை கூர்மை அடைந்த போது சாதிய இறுக்கம் தளரும் என சிந்தனை அறிவு மிக்கோரால் எதிர்பார்க்கப்பட்டது. தேசிய ஒடுக்குமுறைக் கெதிரான போராளிகளும் அவர்தம் இயக்கங்களும் தமது போராட்டப் பாதையில் சாதிய அமைப்பை தகர்த்து எறிவார்கள் என முற்போக்கு எண்ணம் கொண்டோரும் சாதிய ஒடுக்கு முறைக்கு உள்ளானோரும் நம்பினர். ஆனால் துரதிஷ்ட வசமாக இவர்கள்இப் பிரச்சனையை கணக்கில் எடுக்காமலே விட்டுவிட்டனர்.

1975 ஆம் ஆண்டுவரை தமிழ் பேசும் மக்களின் கோரிக்கையை முன்னெடுத்த ஜனநாயகத்தலைமையானதுஇப்பிரச்னையில் ஒருபக்க சார்பு கொண்டதாகவே காணப்பட்டது. அவர்கள் சிற்சில காலங்களில்- சில சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டாலும் அடிப்படைக் கண்ணோட்டம் இல்லாதகாரணத்தாலும், வர்க்க குணாம்சம் காரணமாகவும் ஒரு சரியான வேலைத் திட்டத்தையோ செயற்பாட்டையோ மேற்கொள்ள முடியவில்லை. அதற்குப் பின்னான இளைஞர் இயக்கங்களும் மத்திய தர வர்க்கத்தில் இருந்து வந்தோராலேயே தலைமை தாங்கப்பட்டது. அத்துடன் இவர்கள் தேசிய வெறி கொண்டோராகவே காணப்பட்டனர். ஆரம்ப காலங்களில் இவ் இயக்கங்கள் எந்தவித அடிப்படைக் கொள்கைத்திட்டங்களையும் கொண்டிருக்கவில்லை. இவர்களது ஒரேயொரு நோக்கம்- ஆண்ட பரம்பரை மீண்டும் ஆழ வேண்டும் என்பதே. ஆதலால் தமிழ்பேசும் மக்கள் என்போர் வரலாற்றுவழியில் பல பிரிவுகளாய் உள்ளனர். வர்க்க முரண்பாடு இவர்களிடம் உண்டு என்ற சமூகப் பார்வை இவர்களிடம் இருக்கவில்லை. அத்துடன் போராட்டம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்பது ஆயுதம் ஏந்திய இளைஞர்களால் மட்டுமே முடித்துவிடலாம் என்ற போராட்ட வழிமுறையில் நம்பிக்கை கொண்டிருந்தனர். ஆதலால் மக்கள் அணிதிரட்டப்படவில்லை. அரசியல் மயப்படுத்தப்படவும் இல்லை. இவர்களின் பரபரப்புக்குள்ளேயே எல்லாம் அமுங்கிப் போயின. தெருக்களில் இராணுவம், தெருவோரத்தில் பிணங்கள், துப்பாக்கிக் குண்டுகள் என்ற நிலைமைகளின் போது மக்கள் தங்கள் நிலைப்பாடுகளை மறந்திருந்தனர். ஆனால் அந்தச் சூழ்நிலைகளே வாழ்க்கையானபோது அந்த வாழ்க்கை அவர்களுக்குச் சாதாரணமானபின் அமுங்கிக்கிடந்த தங்கள் உணர்வுகளை வெளிக்காட்டத் தொடங்கியுள்ளனர். உயர் சாதியர்களிடம் சாதீயவெறி வெளிவந்தது; சாதீய வெறிக்காளானவர்களிடம் இருந்து எதிர்ப்புக் குரல் எழும்பியது. விளைவு- ஸ்ரீலங்கா அரசு இதனை ஊதி, ஊதி வளர்க்கின்றது.

## சாதியப் பிரச்சினையில் தற்போதைய சூழ்நிலையில் மாற்றம் கொண்டுவர முடியுமா?

இச்சாதியப் பிரச்சனையில் இப்போதய சூழ்நிலையில் மாற்றத்தைக் கொண்டு வர முடியுமா? மாற்றத்தை கொண்டுவருவதற்கான வழிதான் என்ன என்பது குறித்து போராளிகளும் அவர்கள் தம் இயக்கங்களும் சிந்தித்தேயாக வேண்டும். யாழ்ப்பாண சமூகம் பற்றிய தான அறிவுபூர்வமான தெளிவை முதலில் நாம் பெறவேண்டும். எமது கண்ணோட்டத்தில் யாழ்குடாநாட்டில் வாழ்பவர்கள் என்பவர்கள் பழமைப் பற்றுளர்களாகவும் நிலப்பிரபுத்துவத்தின் எச்சசொச்சங்களாகவும் சிறு உடைமை மனப்பான்மை உடையவர்களாகவும், காணப்படுகின்றனர். குறுகிய நிலப் பரபுக்குள் தம் வாழ்வை நிலைப்படுத்த முனைந்ததன் காரணத்தினால் இவர்களின் உறவு நிலையும் கண்ணோட்டமும் குறுகியே போய்விட்டடது. இம்மக்களின் உயர் வர்க்கமானோர் நீண்டநெடுங்காலமாய் உறிஞ்சி வாழ்வோராகவோ இருந்துவருகின்றனர். ஆங்கிலக் கல்வியைம் இவர்களினாலேயே பெற முடிந்தது. இதனால் தம் நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ள வேண்டிய நெருக்குவாரத்துக்குள் உட்படவில்லை. இவர்களின் அடக்குமுறைக்கெதிரான போராட்டங்கள் சிற்சில இடங்களில் வீரம் செறிந்ததாய் காணப்பட்டாலும் பரவலாக்கப்பட்ட போராட்ட உத்திமுறையை இம்மக்களால் மேற்கொள்ள முடியவில்லை. இவர்களது போராட்டத்தை வழிநடத்த முயன்ற தலைமையும் இம்மக்களை பரந்த அளவில் அணிதிரட்டவும், அரசியல் மயப்படுத்தவும் போராட்டத்தை பரவலாக்கவும் தவறிவிட்டது. இதனால் இப்பிரச்சனை நீறு பூத்த நெருப்பாகவே தொடர வேண்டியதாயிற்று. 1970 இக்குப்பின் தேசிய அடக்குமுறை கூர்மையடையத்தொடங்கியதும் இப்பிரச்சனை பின்னுக்குத் தள்ளப்பட்டுவிட்டது. ஆனால் என்றும் கொழுந்துவிட்டெரியத் தயாராகவே இருந்தது. ஆதலால் இப்பிரச்சனை தொடர்வதென்பது ஈழப் போராட்டத்தை பலவீனப்படுத்தியே தீரும்.

ஈழப்போராட்டமும் அதன் பயனும் ஒரு சாராருக்கு மட்டுமே போய்ச்சேரும் என்னும் அச்சம் இருக்கும் வரை இப்பிரச்சனையின் எரிவுகள் தணியப் போவதில்லை. அதனால் சீர்திருத்தவாதங்களும் புரட்சிகர வாய்ச் சொற்களும் பயன்படப்போவதுமில்லை. எனவே நாம் செயல்முறைத் திட்டத்தின் ஊடாகவே இப்பிரச்சனையை அணுகியாக வேண்டும்.

இயக்கங்களின் அரசியல் பிரிவு என்பது இராணுவப் பிரிவின் நடவடிக்கைகளை அர்த்தப்படுத்துவதும் பத்திரிகைளுக்கு அறிக்கை விடுவதும் என்பது மட்டும்தான் என்னும் நிலை முதலில் மாற்றம் அடைய வேண்டும். அரசியல் பிரிவானது தமிழ் பேசும் மக்களின் அனைத்துப் பிரிவினரிடையேயும் ஊடுருவி அவ்வப் பகுதி பிரசனைகளில் கவனம் எடுத்து அவர்களுடன் இரண்டறக்கலந்து அரசியல் கல்வி யூட்டி புரட்சிகர மனப்பான்மையை தோற்றுவித்து போரட்டத்துடனும் இயக்கத்துடனும் அவர்களைப் பங்கேற்க வைப்பதன் மூலமே இப்பிரச்சனை தீர்ப்பதற்கு வழிவகுக்கும்.

எமது இயக்கமான ஈழப்புரட்சி அமைப்பு 1975ல் உருப்பெறத் தொடங்கியபோது இத்தெளிவான அடிப்படையிலேயே தன் செயல்பாடுகளை மேற்கொண்டது- ஆனால் யாழ்குடாநாட்டிற்குள் மாற்று இயக்க செயல்பாடுகள், பரபரப்புகளை தோற்றுவித்த வண்ணமே காணப்பட்டதால், கருத்துகள் பூரணமாகி ஊடுருவி செல்லுதல் தடுக்கப்பட்டுவிட்டது. ஆனால் தற்போது உரத்தகுரல் ஒலிக்க தொடங்கியுள்ளதால் இவ் விழிப்பை சரியானமுறையில் வழிநடாத்த அனைத்து இயங்கங்களும், இணைந்து இந்தவிடயத்தில் தம் செயல்பாட்டை தொடங்கியாக வேண்டும். ○



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# விடுதலை இயக்கமும் மக்கள் அமைப்புகளும்

''இனவாதம்' கொண்டு பார்ப்பவர்களால் சமூக உண்மைகளை காண முடியாமல் போய் விடுவது யதார்த்தமானது.''

ஈழப் போராட்டத்தில் விவசாயிகள் சங்கம்- தொழிற்சங்கம்- தேசிய விடுதலை இயக்கம் பற்றியதும், நடைமுறைப் படுத்தக் கூடியதுமான செயற்பாடுகளைப் பற்றிய தெளிவான கருத்துக்களை முன்வைத்தே இக்கட்டுரை எழுதப் படுகின்றது- யதார்த்தமான ஈழவர் வரலாற்று அனுபவங்களையும், அவர்களிடம் காணப்பட்ட சங்கங்கள், வரலாற்றில் என்னவிதமாக செயலாயின என்பதையும் ஆராய்ந்து கொண்டு எமது இலட்சிய நோக்கிற்கான பயணத்தினை வெற்றியுடன் சென்றடைய ஒரு திடமான கையாளல் முறையை தெளிவாக இக்கட்டுரையில் வெளிப் படுத்துகிறோம்.

இன்றைய ஈழப் போராட்ட வரலாறு தேசிய இனப்போராட்டத்தைக் கூர்மைப் படுத்தியவண்ணம் வர்க்கப் போராட்டத்தை உள்ளடக்கியவாறு இருப்பதைத் தெளிவாக ஆய்வு செய்த எவரும் காணத் தவறமாட்டார்கள். வர்க்கப் பார்வைஇன்றி ஒரு முதலாளித்துவ சமூகவமைப்பை தெளிவாக இனம் காணமுடியாது. எனவே இந்தப் பார்வையை நாம் ஈழ சமூக அமைப்பிலும் அதன் புறச்சூழலிலும் செலுத்தும்போது எமக்குக் கிடைக்கும் வினாக்களுக்கான விடைகளை மார்க்சிய-லெனினிய தத்துவார்த்த அடிப் படையில் பெறும்போது ஒரு தேசிய விடுதலை இயக்கத்தினது நெறி முறைகளுக்கான வழிமுறைகள் கிடைக்கின்றன. இதற்காக அப்படியே தத்துவங்களை புகுத்தவேண்டுமென்ற குருட்டுத் தனமான முடிவுக்கு எந்தவொரு இயங்கியல் ரீதியான சிந்தனைத் தெளிவுள்ள புரட்சியாளர்களும் முன்வர மாட்டார்கள். இன்றைய ஈழம் எப்படியான புறச்சூழலில் அமைந்துள்ளதென்பதையும் 'இதில் எமது நோக்கத்திற்கு 'ஆதரவான முற்போக்குச் சக்திகள்' எவை என்பதையும் நாம்இனம் காணவேண்டியது முக்கியமான தொன்றாகும். அதன் பின்னர் ஈழத்தினுள் போராட்டத்தை எந்தவுணர்வின் மூலம்கொண்டு சென்று, அந்த அடிப்படை உரிமைகளையும் பெறமுடியாத பாட்டாளி வர்க்கத் தலைமையை உருவாக்கவேண்டிய அணுகு முறைகளை கைக் கொள்ளக் கூடியதான தெளிவான முடிவுகளுக்கு நாம் வரவேண்டும். ஒரு குறிப்பிட்ட இலட்சிய நோக்குடைய போராட்டத்தை முன்னெடுப்பவர்கள் பலவிதமான உத்திகளைக் கையாளுவதன் மூலம் இறுதியானவெற்றியை நிலைநாட்டியே தீருவார்கள்- அதுவரையிலும் ஓயமாட்டார்கள்.

இங்கே, எமது போராட்ட வழிகளுக்கு மேற் கண்ட தொழிற் சங்கங்கள், விவசாய- மீனவ சங்கங்கள் ஏனைய சங்கங்கள் போன்றவற்றை இணைக்கவேண்டுமா? ஏன்? எப்படி? என்ற கேள்விகளுக்கு விடைகாணு முன்னர் வரலாற்றுப் பின்னணியில் இவை எவ்வளவு முக்கியத்துவம் பெற்றநிலையில் இருந்திருக்கின்றன? தற்போது எவ்வாறு செயல்படுகின்றன? என்பவற்றைக் கவனித்துக் கொள்ளல் அவசியம். இதைவிடுத்து ஒரு வர்க்கரீதியான புரட்சியை மேற்கொள்வோம் என்று எண்ணிக்கொண்டு பெயரளவிலுள்ள சங்கங்களை இணைப்பதால் எவ்வித பயனும் ஏற்படப் போவதில்லை- இந்த விஷயத்தில் நாம் தெளிவாக உணர்வு பூர்வமாக அரசியல் மயப்படுத்தாமல்; இணைப்பதாக செய்தி வெளியிட்டுக் கொண்டு நாடகமாடக் கூடாது-வரலாற்று அனுபவரீதியான உத்திகளாக கையாளுவதே இதற்கு சிறந்த ஒரு வழிமுறையாகும்.

சமூக அட்டூழியங்களில் சிக்கியுள்ள மக்களை தெளிவாக விடுவிக்க அந்த சமூக மட்டத்திலுள்ள புத்திஜீவிகளினால் மேற் கொள்ளப் பட்ட ஆய்வுகளின் முடிவுகளை ஆதாரமாக வைத்துக் கொண்டு இயக்கங்கள் செயலாக ஆரம்பிக்கின்றன. இந்த வகையில் இயக்க நோக்கங்களை நிறைவேற்ற வேண்டி. இயக்கம் ஸ்தாபனமயமாக்கப்படவேண்டியது அவசிமாகிறது. எனவே பலதரப் பட்ட சிந்தனை ரீதியில்பிளவுபட்டுள்ள மக்களை பொதுமைப் படுத்திய கருத்தடிப்படையில் அணி திரட்டுமுகமாக இயக்கம் பல அங்கங்களாக செயல்படவேண்டியது. யதார்த்தமான அவசியமாகும்- உதாரணமாக மாணவர் அங்கம், தொழிற்சங்க அங்கம், விவசாய- மீனவ அமைப்புகளுக்கான அங்கம், உதிரிப் பாட்டாளிகள் போன்றவற்றுக்கான அங்கம் போன்ற பலவிதமான அங்கப் பிரிவுகளில் இயக்கம் ஒரு இலட்சியக் குறிக்கோளுடன் அணுக முற்படும். அணுகுமுறைகள் இயற்கைச் சூழல் அதாவது அகச் சூழல் நடவடிக்கைகளிலிருந்

(18ம்-பக்கம் பார்க்க)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முல்லைத் தீவின் கரையோரத்தில் இனவெறி அச்சுறுத்தல்


இலங்கையின் மீன்பிடித் தொழிலை அவதானிக்கும் போது பொது நோக்கில் வட பகுதி பௌதீகரீதியில் கூடிய சாதக தன்மை கொண்டதாகக் காணப் படுகின்றது. இலங்கையைச் சுற்றியுள்ள ஆழமற்ற கரையோர கண்ட மேடை வலையங்கள் வட மேற்கு, வடக்கு, வட கிழக்குக் கரையோரங்களில்மிகஅகன்றதாகவும் கூடிய பரப்பைக் கொண்டதாகவும் காணப் படுகின்ற தன்மை மீன்பிடிக்கு பெரும் சாதகத் நிலைமையாகும். புத்தளம் மன்னார் தொடக்கம் முல்லைத்தீவு திருமலை வரை இத்தகைய சாதகத் தன்மைகளைக் காணலாம். இலங்கையின் வட கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள முல்லைத்தீவு பிரதேசம்(மாவட்டம்) கடற்கரை சார்ந்து குறிப் பிடத் தக்களவு கரையோரப் பிரதேசத்தை அதன் கிழக்குப் பகுதி எல்லையாகக் கொண் டுள்ளது. இலங்கையின் மீன்பிடியில் முல்லைத் தீவு குறிப்பிடத்தக்களவு பங்கினை வழங்கி வருகின்றது

### முல்லைத்தீவில் மீன்பிடிப்பு:

முல்லைத்தீவு மாவட்ட பிரதேசத்தில் வடக்கே நாயாறு தொடக்கம் கொக்கிளாய சிலாவத்தை, முல்லைத்தீவு வலையன்மடம், அம்ப லவன் பொக்கணை, மாத்தளன், சுண்டிக் குளம் போன்ற இடங்களைக் கொண்டு சாலை ஈறாக இதன் மீன்பிடி மையங்கள் அமைந்திருக் கின்றன. வரலாற்று நோக்கில் பார்க்கின்ற போது மேலே குறிப்பிட்ட கரையோர சிறு கிராமிய மக்கள் ஆரம்பத்திலேயே இப் பிரதேசங் களில் மீன்பிடியில் ஈடுபட்டு வந்துள்ளனர். முல்லைத்தீவு மாவட்டத்தின் உட்பிரதேசங்களில் வசிக்கின்ற மக்கள் சூழ்நிலை வசதிகளுக் கேற்ப விவசாயத்தை முக்கிய ஜீவனோபாய தொழி லாகக் கொண்டு குறிப்பாக நெல் வேளாண்மை யிலும் ம்ற்றும் உப உணவுப் பொருட்களின் உற்பத்தி முயற்சிகளிலும் ஈடுபட கரையோரப் பிரதேசங்களில் வாழ்ந்த மக்கள் பௌதீக சூழ் நிலைக்கு ஏற்ப மீன்பிடித் தொழிலை மேற் கொண்டு வந்தனர். முல்லைத்தீவு மாவட் டத்தின் அனைத்து மக்களினதும் மீன்தேவை களை இவர்களே பூர்த்தி செய்ததோடு தமது வாழ்க்கையையும் வளப் படுத்திக் கொண்டு வந்தனர். அத்தோடு குறிப்பாக வவுனியா கொழும்பு போன்ற நகரப் பிரதேசங்களுக்கும் இங்கிருந்து மீன்கள் ஏற்றப்பட்டன.

### வெளியூர் மீனவர் வருகை:

இலங்கையை நோக்கிவீசுகின்றஇருபெரும் காற்றுத் தொகுதிகளான வடகீழ் பருவ பெயர்ச் சிக் காற்றும்,தென்மேல் பருவக்காற்றும் கால ரீதியில் வேறுபட்டு வீசுகின்ற தன்மை வெளி மீனவரை இங்கு வரவழைப்பதற்கு சாதக மாக இருந்தது. இலங்கையின் தென் மேற்கு பிரதேசத்தில் மீன்பிடிக்கின்ற மீனவர்கள் மே—செப்டம்பர் வரையான காலத்தில் அப் பகுதியில் வீசுகின்ற கடுங் காற்று காரணமாக முல்லைத் தீவுப் பிரதேசத்திற்கு வந்து அக் குறிப்பிட்ட காலத்தில் மீன்பிடித்து விட்டு மீண்டும் முல்லைத் தீவு பிரதேசத்தில் மாரி காலத்தில் வட கீழ் பருவக் காற்று வீசத் தொடங்கியதும்(டிசம்பர்—பெப்ரவரி)இங்கிருந்து பழைய இடங்களுக்குச் சென்று விடுவர். குறிப் பாக கொழும்பு, நீர் கொழும்பு, களுத்துறை, புத்தளம், சிலாபம் போன்ற இடங்களைச் சார்ந்த மீனவர்கள் இவ்வாறாக வந்து மீன்பிடித்து



www.tamilarangam.net

விட்டு இடம் பெயர்ந்து விடுவர். அத்துடன் பருத்தித்துறை, செம்பியன் பற்று, தாழையடி, வல்வெட்டித் துறை, போன்ற இடங்களில் இருந் தும் இங்கு வந்து மீன் பிடித்து விட்டு சென்று விடுவர். யாழ்ப்பாண பிரதேசத்தில் இருந்து வருவோர் பெரிதும் முல்லைத் தீவின் பரம்பரை மீன்பிடிப்பாளர்களின் உறவின் தொடர்புகளின் அடிப் படையிலேயே வந்து மீன்பிடித்துவிட்டுச் சென்று விடுவர். தென் மேற்கு இலங்கையில் இருந்து வந்து மீன்பிடிப்போர் தற்காலிக வாடிகள் அமைத்து மீன்பிடித்து விட்டு காலம் முடிவுற வீட்டுப் பொருட்களையும் கொண்டு சென்று விடுவர்.

### 70க்கு முன்பிருந்த சமூகநிலை:—

1970 ம் ஆண்டுக்கு முந்திய காலங்களில் இப்படியான நிலையே இருந்து வந்தது. இக் காலங்களில் இங்கு பிரச்சனையின்றியே மீன் பிடித்தனர். தென்மேற்குஇலங்கையில் இருந்து வந்தோர் இனரீதியில் சிங்களவராக இருந்தும் பிரச்சனைகள் அதிகம் ஏற்படுவதில்லை. சிறு சிறு பிணக்குகளையும் பரம்பரை தமிழ் மீன்பிடியாளர்களும் தென் மேற்கு சிங்கள மீன்பிடியாளர்களும் சுமுகமாகத் தீர்த்துக் கொண்டனர். அக்காலத்தில் அரசியல் ரீதியான தலையீடுகள் இருக்காமையால் பிரச்சினைகள் ஏற்படவில்லை.

### சிங்கள மீனவர் நிரந்தரமாதல்:

காலவோட்டத்தில் குறிப்பாக 1970 களின் பின் வேறுபட்ட நிலைமைகளை இங்கு நாம் அவதானிக்கலாம். தென் மேற்கு இலங்கையில் இருந்து பருவ ரீதியில் மீன்பிடிக்க வருவோரில் கணிசமான தொகையினர் நிரந்தரமாக வாடி அமைத்து மீன்பிடியில் ஈடுபட்டதுடன் வாழ்விடத்தையும் படிப்படியாக நிரந்தரமாக்க முற்பட்டனர். குறிப்பாக செம்மலை, கொக்கிளாய், மாத்தளான் போன்ற சிறு கிராம மைபங்களில் இந்த நிலமைகளை அவதானிக் கலாம். இக்காலத்தில் கடற்கரை சார்ந்த அரச நிலங்களை இந்த தென்மேற்கு இலங்கை சிங்கள மீன்வர்கள் சொந்தமாக பிடித்து வேலியடைத்து நிரந்தர குடிசைகளையும் அமைத்ததுடன் தென்னை மற்றும் மரப்பயிர்கள் போன்றவற்றையும் பயிரிடத்தொடங்கினர். செம்மலை, கொக்கிளாய், போன்ற கிராமங்கள் இதற்குச் சிறந்த உதாரணங்களாகும். 1970 ஆம் ஆண்டுகளைத் தொடர்ந்து 1977 வரையான காலகட்டங்களில் மூன்று விதமான மாற்றங்களை முல்லைத்தீவில் வெளி மீனவர் வருகையின் தொடர்பாக அவதானிக்க முடிந்தது.

1) தென் மேற்கு சிங்கள மீனவர்கள் நிரந்தர குடியிருப்புகளை அமைத்து நிரந்தரமாக வாழத் தொடங்கினர்.

2) தென் மேற்கு இலங்கை தவிர்ந்த தென் இலங்கை மீனவர்களும் மீன் பிடிக்கத் தொடங்கியமை. குறிப்பாக களுத்துறை, பலப்பிட்டி, ஹிக்கடுவை, காலி மாத்தறை பகுதிகளில் இருந்தும் மீனவர்கள் வந்தனர்.

3) 1970 களுக்கு முன் பெரிதும் மீன்பிடித் தொழிலை மேற்கொண்டு தமது ஜீவனோபாயத்தை நடாத்திய மீனவர்களை விட பெரிய மீன்பிடி முதலாளிமார்களும் மீன்பிடி சம்மட்டியார்களும் வந்து மீன்பிடிக்கத் தொடங்கியமை முக்கிய மாற்றமாகும்.

### பாதிப்பு ஆரம்பமாகிறது:

1970- 77 வரையான காலத்தில் வெளி மீனவர்களின் வருகையினால உள்ளூர் மீனவர்கள் பெரிதும் பாதிப்படையத் தொடங்கினர். இக்கால கட்டத்தில் இரண்டு விதத்தில் முல்லைத்தீவு பரம்பரை மீனவர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டது.

1) தென்மேற்கு இலங்கை மீன் பிடிச்சம் மாட்டிகள் கூடிய முதலீட்டுடனும் பாரிய இயந்திரம் பூட்டிய வள்ளங்களுடனும் கூலித் தொழிலாளிகளுடனும் மீன் பிடியில் ஈடுபட, பரம்பரை மீன்பிடிப்பாளர்களினால் ஈடு கொடுக்க முடியவில்லை.

2) வறிய மீனவர்கள் பிடிக்கும் பொருட்களைக் குறைந்த விலைக்கு வாங்கி அவர்களைச் சுரண்டி கூடிய வருவாயை ஈட்டியமை.

இக்காலகட்டங்களில் மீன்பிடித்தகராறுகள் அடிக்கடி ஏற்படுவதுடன் இனரீதியிலான வேறுபட்ட கண்ணோட்டங்களும் மீனவர்களிடையே ஏற்பட்டது. சிறு சிறு பிணக்குகளை ஓரளவுக்கு மீனவர்களே இன வேறுபாடின்றி தீர்த்தார்களாயினும் பெரும்பாலும் இனத் தகராறுகளுடனேயே உருவெடுத்தன. இந்த நிலைமைகள் மீன் பிடிப்பாளர்களின் கரைவலை மீன் பிடியை வெகுவாகப் பாதிக்கின்றன.

### வன்முறைகள் வலைவிரித்தன:

இலங்கையிலே ஏற்பட்டு வந்துள்ள இன ரீதியிலான கலவரங்கள் ஒவ்வொன்றுமே முல்லைத்தீவு மீனவர்கள் பிரதேசங்களிலும் பிரச்சனையை ஏற்படுத்தி வந்திருக்கின்றன. நிம்மதியாக மீன்பிடித்து தமது சீவியத்தை

(15-ம் பக்கம் பார்க்க)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிறீலங்காவின் வதை முகாமிலிருந்து...

தொடர்ந்தும் சிறைகளில் அடைபட்டிருக்கும் போராளிகளில்- இருவர், தம் அனுபவங்களை "ஈழம்" வாசகர்களுக்காய் எழுதியுள்ளனர். அவர்கள் உள்ளே இருந்து கொண்டிருப்பதால் அவர்களின் பெயர்கள்- இடங்கள் பிரசுரிக்கப் படவில்லை. கட்டுரை அவர்களது எழுத்து நடையிலேயே வெளியிடப்பட்டுள்ளது.

25.1. 1984 இரவு ஒரு மணியளவில் வெறி பிடித்த இராணுவ மிருகங்கள் வீதியில் வைத்து என்னைப் பிடித்தனர். அப்போது என்னிடம் இருந்த கைதுப்பாக்கி அவர்களால் பறிக்கப் பட்டபோது அவர்கள் தங்கள் கைகளிலிருந்த துப்பாக்கியினால் நிலத்தில் சுருண்டு விழும்வரை என்னை தாக்கினர். நிலத்தில் விழுந்த என்னை பந்துபோல் தூக்கி இராணுவ வாகனத்திற்குள் எறிந்தனர் அது டிரக் வண்டியாதலால் அதற்குள் இருந்த 12இராணுவ மிருகங்களின் கால்கள்என்னுடம்பின்மீதுசுதந்திரமாகவிளையாடின பலாலியை அடையும் வரை அவர்கள்என்னைத் தாக்கிக் கொண்டே இருந்தனர். என்னுடல் எங்கும் ஒரே ரணங்களாக இருந்தது. அப்படியே பலாலி முகாமையடைந்தபோது அத்துன்பத்திலும் ஒரு மகிழ்ச்சி- எனக்கு கட்டியம் கூறப் பட்டதுதான். பிரதான வாசலைத் தாண்டி முகாமிற்குள் புகுந்தபோது எனக்கு அடைமொழிகளுடன் கூடிய கட்டியம் கூறப் பட்டதால் அந்த நள்ளிரவு நேரத்திலும் 100க்கு மேற்பட்ட இராணுவத்தினர் என்னைச் சுற்றிக் கொண்டு ஒரே ஆரவாரம் செய்தனர். அத்துடன் அவர்கள் என்னை கைப்பந்தாடியபடியே நடு மைதானத்திற்கு கொண்டு சென்றனர். கை கால்கள் தூக்க முடியாத நிலையில் இருந்த என்னை அங்கிருந்த மரத்திலே பிணைத்து விட்டார்கள். எனக்கு காவலாக சில இராணுவத்தினர் நின்று கொண்டிருந்தனர்.

என்னைப் போலவே சில இளைஞர்கள் மரத்திலே தொங்கிக் கொண்டிருந்தனர். காவலில் இருந்த இராணுவத்தினர் பிணத்தை சுற்றும் கழுகுகள்போல் என்னையே சுற்றிக் கொண்டிருந்தனர். ஒருவன் இரண்டு வாளிகளில் நீர் கொண்டு வந்தான். என்னைச்சுற்றி நின்ற நால்வரில் ஒருவன் எனது கைக் கடிகாரத்தை கழற்றிக் கொண்டான். மற்றவன் எனது காலில் இருந்த செருப்பையும் மற்றவன் எனது பணத்தையும்எடுத்துக் கொண்டான். மற்றவன் தான் கொண்டு வந்த நீரை என்மீது ஊற்றினான். அப்படியே சுமார் இரண்டு மணித்தியாலங்கள் நான் இருந்தேன். அதன் பின்னர் 3 மணி இருக்கும் என நினைக்கின்றேன். என்னை அழைத்துச் சென்று ஒரு அறையில் விட்டார்கள். அங்கே மூன்று அதிகாரிகள் இருந்தனர். அறைக் கதவு சாத்தப் பட்டபோது நான் தள்ளாடிக் கொண்டிருந்தேன். நின்று கொண்டிருந்த அதிகாரி எனது வயிற்றில் எட்டி உதைத்தான். அதனால் நான் சுருண்டு கீழே விழுநத போது எனது தலைமயிரைப் பிடித்து மேலே தூக்கிய அதிகாரி அரை மணி நேரம் விசாரணை செய்த பின்னர் உடனிருந்த அதிகாரிக்கு ஏதோ உத்தரவிட்டான்.

அதன் பின்னர் என்னைக் கூட்டிக்கொண்டு வெளியேறிய மற்றஅதிகாரி ஏதோஉத்தரவிட்டதனால் வாகனங்கள் எல்லாம் தயாராக இருந்தது.

என்னை ஒரு கவச வாகனத்திற்குள் ஏற்றினர். அதற்குள் இருந்தவர்கள் நால்வர். அவர்கள் என்னை மாறி மாறி உதைப்பதும், துப்பாக்கியால் அடிப்பதும், பூட்ஸ்காலால் மிதிப்பதுமாக இருந்தனர். வாகனம் சிறிது தூரம் சென்றதும் நின்றது. என்னை வெளியே தூக்கினார்கள். முன்னால் சென்ற ஜீப் வண்டிக்குள் ஏற்றினார்கள். இனிமேல் உனது வீடு இருக்குமிடத்தை காட்டு என்றார்கள். சுற்றிப் பார்த்தேன். வீட்டை அண்மித்து விட்டதால் வீட்டை காட்டினேன். ஒருவன் இறங்கி வீட்டிற்குள் சென்று வீட்டில் உள்ளவரை கூப்பிட்டான். எனது வீட்டிலி

www.tamilarangam.net

ருந்து அப்பா, அம்மா, அக்கா, தங்கை நால்வரும் பயந்து நடுங்கியபடியே வெளியே வந்தார்கள். அவர்களிடம் என்னை எங்கே என்று கேட்டதற்கு, நான் இப்போது வீட்டிற்கு வருவதில்லை என அவர்கள் கூறியதால் என்னை கூட்டிக்கொண்டு சென்றனர். இறுதித் தடவையாக உங்கள் பிள்ளையை பார்த்துக் கொள்ளுங்கள் என அவர்களிடமும், குடும்பத்தாரையும் உன் ஈழ மண்ணையும் இறுதியாகப் பார்த்துக் கொள் என என்னிடமும் கூறிவிட்டு என்னை மீண்டும் கவச வாகனத்திற்குள் ஏற்றிக்கொண்டனர். எனது இரண்டாவது வதை முகாம் பயணம் ஆரம்பமாகியது. அமைச்சர்கள் பவனி வருவதைக் கண்டிருக்கிறேன். நானே அவ்வாறு ஊர்வலமாக வருவேன்என எதிர்பார்க்கவில்லை. முன்னால் இரண்டு ஜீப் வண்டிகள், இரண்டு கவச வாகனம், இரண்டு டிரக் வண்டிகள் சூழ எமலோகத்திற்குள் பிரவேசித்தேன்.

வாகனங்கள் புடைசூழ சென்றதனால் யாரோ விருந்தாளிகள் வருகிறார் என்பது தெரிந்ததாலோ என்னவோ எமலோகமாகிய ஆனையிறவு தடை (வதை) முகாம் சுறுசுறுப்பாகியது. கௌரவமாக என்னை கீழே இறக்கிச் சென்று புலனாய்வு அதிகாரி அதி கௌரவ மேன்மை மிகு பீரிஸ் குலதுங்காவிடம் ஒப்படைக்கப்பட்டேன். என்னை மேல் கீழாக பார்த்த அந்த மனிதன் பின்னால் இருந்தவரிடம் கண்ணைக் காட்டினார். என்னிடம் எந்த கேள்வியும் கேட்கவில்லை. என்னை அழைத்துச் சென்றவர்கள் ஓலைக் குடிசை ஒன்றிற்குள் அழைத்துச் சென்றார்கள். முகட்டில் இருந்த கயிற்றால் எனது கால்களை கட்டி தலைகீழாக தொங்க விட்டனர். கீழே பார்த்தேன்-ஒரே உப்புச் சாக்குகள் இருந்தன. அதே குடிசையில் மூலையில் நிர்வாணமாக அறிவற்ற சூழ்நிலையில் ஒரு இளைஞன் கிடந்தான். உடலெங்கும் ஒரே ரணங்கள்.

எனது மனம் ஒரே கலக்கமாக இருந்தது. அரை மணி நேரத்தின் பின்னர் பீரிஸ் சில இராணுவத்தினர் சூழ வந்தார். அவர் கேள்வி கேட்க மொழி பெயர்த்து ஒரு தமிழன் என்னைக் கேட்டுக் கொண்டிருந்தான். நான் மௌனம் சாதிக்கவே பீரிஸ் வெளியேறியதும் தமிழ் அதிகாரி எனக்குக்கிட்டே வந்து, சித்திர வதை படுமுன் உண்மை சொன்னால் உனக்கு நன்மை எனக் கூறி வெளியேறி விட்டார். சுற்றிவர நின்ற நால்வரும் தங்கள் கைகளிலிருந்த எஸ்லோன் பிளாஸ்டிக் பைப்பால் என்னை தாக்கினார்கள். ஒருவன் நெஞ்சிலும் மற்றவன் முதுகிலும், மற்றவன் தொடையிலும், நாலமவன் விறைத்துப் போயிருந்த காலிலும் எஸ்லோன் பைப் வெடிக்க வெடிக்க அடித்துக் கொண்டே இருந்தனர். உடல் எல்லாம் இரத்தக் காயங்கள்.

நான் போட்ட கூச்சலில் பிரீஸ் மீண்டும் திரும்பி வந்து என்னை கேள்வி கேட்டு பதில் கூறிக் கொண்டிருந்தேன். இடைக்கிடையே எனக்கு தமிழாக்கம் செய்து கொண்டிருந்த தமிழன் என்னை சிகரெட்டால் சுட்டுக் கொண்டிருந்தான். அதனால் வேதனை தாங்காமல் நான் கத்திக் கொண்டிருந்த போது எஸ்லோன் பைப் என்னை, வயிற்றைத் தாக்கியது. அச்சமயம் பீரிஸ் ஏதோ கட்டளை இட்டதனால் என்னை கீழே இறக்கி வெளியே கொண்டு சென்றனர். எனது ஆடைகளை களைந்து, மதிய வெய்யில் கொளுத்திக் கொண்டிருந்த போது மரத்தில் கட்டித் தொங்கவிட்டனர். நேற்று பிடிபட்டதில் இருந்து எதுவும் சாப்பிடாததனால் உயிர் போகின்ற வேதனையிலிருந்தேன். இரண்டு மணியளவில் கீழிறக்கிய போது நான் நிற்க முடியாமல் வீழ்ந்து விட்டேன். அவர்கள் என்னை அப்படியே நிலத்தோடு இழுத்துப் போய் உப்புச் சாக்கின்மேல் போட்டு நீரை ஊற்றினார்கள்.

மூன்று மணியளவில் எனது சாப்பாடு தரப்பட்டது. நான் சாப்பிட மறுத்தபோது பலமாகத் தாக்கி என்னைச் சாப்பிட வைத்த பின் மீண்டும் தலை கீழாக கட்டித் தூக்கி விட்டு கீழே நெருப்பை கொளுத்தி மிளகாய் போட்டு விட்டு என் முகத்தை சாக்கினால் மூடினார்கள். நான் மூச்சுத் திணறி சில நிமிடங்களில் நினைவிழந்து விட்டேன். நினைவு பெற்று திரும்பிய போது நீருக்குள் கட்டி விடப்பட்டிருந்தேன். என்னைத் தூக்கி வெளியே எடுத்தபோது என்னருகே நின்ற தமிழ் அதிகாரி சொன்னார்' உன்னிடமிருந்து எங்களால் தெளிவாக விபரங்கள் பெற முடியவில்லை. உன்னை இன்றிரவு கொழும்பிற்கு அனுப்புகின்றோம் என்று கூறினார். என்னை அழைத்துச் சென்று பழைய சாரம் ஒன்றை தந்தார்கள். நான் உடுத்திக் கொண்டேன். அதேபோல மிகப் பழையதான 'ரீசேட்' ஒன்றும் தந்தார்கள்.

இரவு பத்து மணி போல் வாகனங்கள் எல்லாம் தயார் நிலையில் இருந்தன. நாலு கவச வாகனங்கள் நின்றன. என்னைப்போல இன்னும் மூவர் கைகளில் விலங்கு மாட்டப்பட்டு கொண்டு வரப்பட்டனர். ஒவ்வொருவரும் ஒவ்வொரு வாகனத்தில் ஏற்றப்பட்டோம். அப்போது எனது தோற்றத்தை உங்களுக்கு கூற வேண்டும். எனது கால்கள் இரண்டும் ஆனைக் கால் போல் வீங்கியிருந்தது. விலங்கு மாட்டப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பட்டதனால் உயிர் போகும் வலியாக இருந்தது. எனது உடம்பில் காயங்கள் ஏற்படாத இடமேயில்லை. இத்தகைய சூழ்நிலையில் ஆனையிறவில் இருந்து 4 கவச வாகனங்களுடன் 3 ஜீப் வண்டிகளும் 2 டிரக் வண்டிகளும் ஊர்வலமாக வர நாம் ஸ்ரீலங்காவின் தலைநகரை நோக்கி புறப்பட்டோம்.

அங்கிருந்து புறப்பட்ட அரை மணி நேரத்தில் மாங்குளம் இராணுவ முகாமில் நிற்பாட்டினார்கள். அப்போது என்னை வெளியே தூக்கி வீசினர். ''தம்பி பாரு. நாங்கதான் சிங்கக்குட்டி'' எனக் கூறி எங்களை பரிகாசம் செய்தனர் சில இராணுவ வீரர்கள். பின்னர் எங்களுடன் வந்த ஒரு ஜீப்பும் ஒரு டிரக்கும் அங்கேயே நிற்க, அங்கிருந்து இரண்டு கவச வாகனங்கள் எங்களுடன் தொடர்ந்து வவுனியாவை அடைந்தபோது அங்கு நிற்கவில்லை. எம்முடன் வந்த டிரக்கும் ஒரு ஜீப்பும் அங்கேயே நிற்க 6 கவச வாகனங்களில் எமது பயணம் ஆரம்பமாகியது.

முக்கால் மணி நேரத்திற்குள் நாம் அனுராதபுரம் எல்லையில் இருக்கும் நம்பைக் குளம் இராணுவ முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டோம். அங்கு சென்றபோது தான் ஒரு சில மனிதாபிமான இராணுவத்தினர் இருக்கின்றார்கள் என்ற சிந்தனை எங்களுக்குள் ஏற்பட்டது. எங்களை எல்லாம் வெளியே இறக்கினார்கள். மூவரையும் அங்கிருந்த ஜன்னல் ஒன்றில் பிணைத்த பின்னர் எங்களைக் கூட்டி வந்த வீரர்கள் விலகிச் சென்று விட்டனர். அங்கு கடமையாற்றிய இராணுவத்தினர் தாம் எமக்கு அருகே காவலில் இருந்து கொண்டு எமக்கு உண்பதற்கு பாணும் பருப்பும் தந்து தேநீரும் தந்தனர். அரை மணி நேர இடை வெளியின் பின்னர் எங்கள் மூவரையும் டிரக் வண்டியில் ஏற்றி மேலேயுள்ள கம்பிகளில்பிணைத்த பின்னர் சுமார் பன்னிரண்டு இராணுவ வீரர்களும் ஒரு வண்டியில் புறப்பட்டு கொழும்பை நோக்கியாக சென்று கொண்டிருந்தது.

அதிகாலை 3·30 மணியளவில் நாம் ஸ்ரீலங்காவில் மிகப் பெரிய வதை முகாம் என வர்ணிக்கப்படும் நாலாம் மாடிக்கு கொண்டு செல்லப்பட்டோம். இவ்வாறு நாம் நாலாம் மாடிக்கு கொண்டு செல்லப்பட்டபோது சுமார் ஆறு அதிகாரிகள் இருந்தனர். அவர்களிடம் எம்மை ஒப்படைத்தனர். நாலாம் மாடியில் கிழக்குப் பக்கமுள்ள 3 வது ரூமில் இரும்பு பீரோவின் பிடியில் நாங்கள் பிணைக்கப்பட்டிருந்தோம். காலை 8 மணிவரை எங்களை யாரும் எதுவும் விசாரிக்கவில்லை. 8. 30க்கு பின்னர் அங்கு வேலை செய்யும் ஊழியர்கள் வர ஆரம்பித்தனர். சுமார் 100பேருக்குக்குறையாமல் இருக்கும் என நம்புகின்றேன். ஆள்மாறி எல்லோரும் அடித்தனர். அதாவது அன்றைய தினம் சி. ஐ. டி. இயக்குனர் முதற்கொண்டு தேனீர் வழங்கும் பையன் உட்பட சகலரும் எம்மை— பொலிசை சுட்டதாகக் கூறி தாக்கினர். அன்று முழுவதும் எமக்கு ஆகாரம் ஏதும் தரவில்லை.

பின்னர் பிற்பகல் 5. 30 மணியளவில் தான் துறை முக பொலிஸ் நிலைய பாதுகாப்பில் வைக்கப்பட்டேன். அங்கு எனது நிலை மிக பரிதாபம். ஆறு அடி நீளம் இரண்டரை அடி அகலம் உள்ள அறை. முன்பக்கத்தில் 6 அடி நீளம் 2அடி அகலமான கதவு. பின்பக்க 1 சதுரத்தில் உயரமான கம்பி யன்னல். அறையின் உயரம் 10 அடி கம்பி எண்ணுவது என்றுகேள்விப்பட்டிருக்கின்றேன். நானும் கம்பி எண்ணினேன். யன்னலில் 6 கம்பி குறுக்குச்சட்டம் 4 கம்பி பின் கம்பி. கதவில் நீளக்கம்பி 8. குறுக்கு கம்பி 2. நாம் படுப்பதற்கு சீமெந்தினால் கட்டப்பட்ட கட்டில். அதன்மேற்கு மூலையில் கக்கூஸ். இதற்குள் எனது முப்பது நாள் வாசம் எப்படி இருந்திருக்கும் என்பதனை நீங்களே சிந்தியுங்கள்.

காலையில் ஒரு வாளி நீர் தரப்படும். பல் விளக்க பற்பொடி கிடையாது. ஒரு வாளி நீரில் நாம் காலைக் கடனைக் கழித்து, முகம் கழுவ வேண்டும். காலையில் ஆகாரம் ஒரு துண்டு வெறும் பாண். மதியம் இரண்டு அகப்பை சோறு, பலாக்காய் கறி. அதுவும் ஒரு பிடி சோற்றுக்குரியது தான் தரப்படும். இரவில் இரண்டு அகப்பை சோறும் பொல் சம்பலும். சாப்பாடு சாப்பிட்டு அரை மணி நேரம் கத்தினால் குடி தண்ணீர் தரப்படும். இப்படிப்பட்ட சூழ்நிலையில் இடைக்கிடை எமக்கு விமோசனம் கிடைக்கும். எப்படிஎன்றால் எம்மை கைவிலங்கு பூட்டி பாதுகாப்புக்கு இரண்டு வண்டிகள் முன்னாலும் பின்னாலும் வர நாலாம் மாடிக்கு அழைத்துச் செல்லப்படுவோம். அங்கே விசாரணைக்குட்படுத்தினார்கள்.

கொடிய மிருகங்களின் பிரதி பிம்பங்களாக A.S.P. தஸநாயக்கா, A.S.P. ஜினசேன. A.S.P. யூரயம்பதி, O.I.C. கீர்த்தி கஜநாயக்கா, I.P. மெண்டிஸ், S. I. ஆறுமுகம், S. I. உபவன்ச, S.I. ஜெயதிலகா, சார்ஜன் விஜயரத்ன, சார்ஜன் ரட்னசிங்க, P.C. பெரோஸ், P. C. கீர்த்தி ஆகியோர் விசாரணை செய்தனர்.

இவர்களுடைய விசாரணையின்போது என்னை நிர்வாணமாக்கி என் உடம்பில் சிகரட் காயங்களை ஏற்படுத்தி என்னை சித்திரவதை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செய்தவர் A.S P. யூரயம்பதிதான். அத்துடன் அவரது புனிதமான ஆயுதம் எனது கால் நகங்களை பிடுங்கி எடுத்ததுதான். அடுத்தவர் A S.P. தஸ நாயக்கா. இவர் என்னை விசாரித்தபோது எந்தவித தாக்குதலும் செய்யவில்லை. முதலில் இவருடன் I. P. மெண்டிஸ் இருந்தார். இவர் விசாரிக்கின்றபோது அவர் சித்ரவதை செய்தார். ஒரேயொரு சித்திரவதைதான் செய்தார். எனது ஆணுடம்பை மேசை லாக்கருக்குள் வைத்து அடிக்கடி அமர்த்திக்கொண்டே எனது பிராணனை வாங்கிக்கொண்டிருந்தார். இந்த இருவரின் விசாரணையும் முடிந்த பின்னர்A.S.P. ஜினசேன என்னை விசாரித்தார். இவருக்குமொழி பெயர்ப்பாளர் S. I. ஆறுமுகம். இவர் என்னை அடிக்கடி எஸ்லோன் பைப்பால் மட்டும் தாக்கி வாக்கு மூலம் எடுத்தார். பின்னர் நான் O.I.C. கஜ நாயக்காவிற்கு வாக்குமூலம் கொடுத்தேன். அதற்கு I. P. உபவன்ச, P. C. பெரோஸ் இருவரும் மொழி பெயர்ப்பு செய்தனர். இவர்கள் என்னைத் தலைகீழாக கட்டித் தூக்கி என்னை எஸ்லோன் பைப்பால் தாலாட்டியேவாக்குமூலம் எடுத்தனர். மொத்தமாக எடுக்கப்பட்ட வாக்கு மூலங்களில் என்னுல் எனது கையெழுத்து வாங்கப்பட்ட பின்னர் குலதெய்வத்தை வணங்கிக் கொள்-உன்னை கொலைக்களம் அனுப்பப் போகிறோம் என்று கூறி என்னை வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு அனுப்பினுர்கள். இப்போது வெலிக்கடை சிறைச் சாலையில் மரணத்தின் வரவை எதிர்நோக்கி இருக்கிறோம். ஈழ விடுதலைப் போராளிகளே! எமது மரணத்திலாவது ஈழம் உருவாகட்டும்! வெல்க ஈழம்!

எட்டாம் திகதி சனவரி மாதம் வவுனியாவிலிருந்து கிளிநொச்சிக்கு பேருந்து வண்டியில் வந்துகொண்டிருந்தஎன்னைமாங்குளம்இராணுவ முகாமடியில் சோதனைக்குள்ளாக்கப்பட்டபோது என்னிடமிருந்த துண்டு பிரசுரங்களை காரணமாக வைத்து கைது செய்தனர். துண்டு பிரசுரம் தொடர்பான இயக்கங்கள் பற்றி என்னை விசாரணை செய்தனர். நான் எதுவும் தெரியாதுஎன்று கூறியமையால் மிருகத்தனமாக என்னைத்தாக்கினுர்கள். அதில் ஒருவர் எனது தலையில் அடித்ததனுல் பலமான காயம் ஏற்பட்டுநான் நினைவிழந்தேன். அறிவு பெற்று நான் கண் விழித்தபோது நாலு இராணுவ வீரர்கள் காவல்காக்கவவுனியா அரசினர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தேன்.

ஐந்து நாட்களின் பின்னர் வவுனியா யோசேப் குவாட்டர்ஸ் கொண்டு செல்லப்பட்டேன். அங்கு புலன் விசாரணைப் பகுதியில் ஒப்படைக்கப்பட்டேன். அங்கு 'எமதர்மராஜா' என்று கேள்விப் பட்டிருக்கிறேன். ஆனுல்நேரில் கண்டதில்லை. அத்தகைய தோற்றமுடைய மனிதன் என் அருகே வந்தான். அடே என்னை தெரியுமா? நான்தான் கமுறுகம. என்னிடம் வந்தவன் யாருமே தப்பியது இல்லை- உண்மை சொல்லாமல் என்று கூறிவிட்டு என்னைத் தலை கீழாக கட்டிவிட்டுவிசாரணையை ஆரம்பித்தான் அவன் வேறு ஏதும் செய்யவில்லை. கையில் ஒரு பிளேட்டுடன் என்னருகே வந்தான். என்னிடம் வாக்குமூலம் எடுக்கும்வரை எனது மேல்முழுக்க மொத்தம். 36 பிளேட் காயங்களை ஏற்படுத்தி வாக்கு மூலம் எடுத்து முடித்து என்னை கீழே இறக்கிப் போட்டார்கள். எங்கும் இரத்தம் வடிந்து கொண்டிருக்க மேனிமுழுவதும் ஒரே வலியாக வெறும் நிலத்தில் ஆடையில்லாமல் நிர்வாணமாக படுத்திருந்தேன். அப்போது நாலம்மாடியைச் சேர்ந்த சி. ஐ. டி. I. P பாலகே வந்தாள். மிருகத்துடன் வாழ்ந்தே பழக்கப்பட்டிருப்பான் என நினைக்கிறேன். என்னைப் பார்த்ததும் சிரித்துக் கொண்டே ஏதோ கூறியதும் ஒருவர் என் மீது உப்பு நீரை ஊற்றினுர். உயிர் போகின்ற வலியில் அம்மா! அம்மா! என்று கத்திக் கொண்டே இருந்தேன். சிறிது நேரத்தில் பீரிஸ் குலதுங்கா என்ற இராணுவ அதிகாரியும் வந்து சேர்ந்தான். இருவரும் என்னை விசாரித்த பின்னர் எனக்கு ஒரு சாரமும் சேட்டும் தரப்பட்டது. அணிந்துகொண்ட பின்னர் அழைத்து வரப்பட்ட எனது தந்தைக்கு என்னை காட்டிய பின்னர் ஹெலிகப்டர் மூலம் நான் வெலிக்கடைக்கு கொண்டு செல்லப்பட்டேன் அங்கு எனது பெயரை பதிவு செய்த சிறைச்சாலை அதிகாரி கடைசியாக வெளியுலகை பார்த்துக் கொள் என்றுகூறி, கொலைக் களமான வெலிக்கடை சிறைக்குள் அழைத்துச் சென்ருர். அங்கு இரண்டு தடவைகள் எனது காயத்திற்கு மருந்து போடப்பட்டது. மரண தேவனின் தூதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். O

---

புரட்சிகர பலாத்காரமானது பொதுமக்களின் அரசியல் அமைப்புடன் இணைந்ததாகவும், ஆயுதந் தரித்த மக்கள் படையுடனும், ஆயுதந் தாங்கிய போராட்டத்துடனும், வெகுஜன எழுச்சியுடனும் முடிவுறும் மக்கள் போராட்டமாக அமைய வேண்டும். இந்த தத்துவத்தின் அடிப்படையினை சரிவர கிரகிப்பதன் மூலமே முழுத் தேசத்தையும், அல்லது முழு மக்களையும் போருக்கு ஆயத்தம் செய்யமுடியும். எதிரியை ஆயுதத்தால் மட்டுமல்லாது கிடைக்கும் எந்தவொரு அம்சத்தாலும் எதிர்க்க முயல வேண்டும். எமது போராட்டம் ஆயுதமேந்திய எதிர்ப்பு மட்டுமல்லாமல், அரசியல் அமைப்புக்குள்ளாலும் போராட வேண்டும்.

(--ஜியாப் Vonguyen- Giap.)
வியட்னுமின் படைத்தளபதி.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

நடாத்தி வந்த தமிழ் மீனவர்களுக்கு அச்சுறுத்தலாக இந்த இனக்கலவரங்கள் அமைந்தன. 1974, 1977, 1983, கலவரக்காலங்கள் வந்தேறி சிங்கள மீனவர்களின் தொல்லைகள் அதிகரித்த நிம்மதியற்ற காலங்களாகவே இருந்தன. இந்தக் காலங்களில் பாதுகாப்பு படையினரின் மிரட்டல்கள் தமிழ் மீனவரைப் பெரிதும் துயரத்தில் ஆழ்த்தின. குறிப்பாக 1978, 83 கலவரக் காலங்களில் பாதுகாப்புப் படையினர் பல தமிழ் மீனவ குடிசைகளையும் வாடிகளையும் தாக்கி சிலவற்றை எரித்து நாசத்தை ஏற்படுத்தியுமுள்ளனர். பாதுகாப்பு படையினர் சிங்கள மீனவரைத் தமது சொந்த இடங்களுக்குப் போகவிடாது தடுத்ததுடன் அவர்களைக் கொண்டு பல தமிழ் மீனவ குடிசைகளும், வாடிகளும் தாக்கப்பட்டு அப்பாவிகளான தமிழ் மீனவர்களையும் கூட தாக்கி ஓடச் செய்துள்ளனர். பல தமிழ் மீனவர்கள் செம்மலை, முள்ளிவாய்க்கால், கொக்கிளாய், போன்ற இடங்களில் வசிக்க முடியாமல் உறவினர்களிடம்சென்று பாதுகாப்புதேடியுள்ளனர். இதனைத் தொடர்ந்த காலங்களில் கடலில் கூட சிங்கள- தமிழ் மீனவரிடையே தகராறுகளும் சண்டைகளும் கூட ஏற்பட்டு வந்திருக்கின்றன. இதனால் தமிழ் மீனவரின் தொழில் பாதிப் படைந்து வருவாய் குறைந்து தமது வாழ்க்கையை நடாத்த முடியாது திண்டாடிக் கொண்டிருந்த காலம் இது.

**77க்குப் பின் பெற்ற முனைப்பு:**

1977 ம் ஆண்டு புதிய ஐ.தே. கட்சியின் சோவனிஸ அரசாங்கம் பதவிக்கு வந்த காலத்தில் இருந்து இன்றுவரை முல்லைத்தீவு மீனவ பிரதேசங்களில் ஏற்பட்டு வருகின்ற ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் முனைப்பானவை. இந்த காலங்களில் குறிப்பிடக்கூடிய அம்சமென்னவென்றால் இதுவரை காலமும் இல்லாத வகையில் சிங்கள மீனவரின் ஆக்கிரமிப்புக்கும் குடியேற்றத்திற்கும் அரசியல் ரீதியிலான பாதுகாப்பும் அதிகரிக்கப்பட்டு வருவதாகும். இந்த சிங்கள மீனவ முதலாளிமாரின் ஆக்கிரமிப்புக்கு உடந்தையாகவும் ஆதரவாகவும் ஐ. தே. க. அரசாங்கம் இங்கு மூன்று விதத்தில் திட்டமிட்ட ரீதியில் செயற்பட்டு வருவதைக் காண முடிகின்றது.

1) சிங்கள, பாராளுமன்ற பிரதிநிதிகளின் உறவினர்களான பெரிய சம்மாட்டி, முதலாளிகளை குடியேற்றியமை-

2) தென் இலங்கை பெருந்தொகை சிங்கள மீனவர்களையும் நிரந்தர குடியேற்றத்திற்காக கொண்டு வந்து குவித்துக் கொண்டு இருக்கின்றது.

3. சிங்கள மீனவர்களுக்கு இராணுவ ரீதியான பாதுகாப்பினை உறுதிப் படுத்துகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 1981 இல் மொத்தச் சனத் தொகையில் மிகக் குறைந்தே சிங்கள மக்களே இருந்தனர். இந்த விகிதாச்சாரம் சிங்கள சோவனிச அரசுக்கு திருப்தியைக் கொடுக்கவில்லை. வவுனியா திருகோணமலையை ஆக்கிரமித்து சிங்கள இனத்தவரை பெரும்பான்மைச் சமூகத்தவராக விகிதாசாரத்தில் கொண்டு வருவதற்கு மேற்கொண்ட திட்டமிட்ட குடியேற்ற நடவடிக்கைகளில் இந்த அரசு வெற்றியைக் கண்டுள்ளது. மேலும் மீன்பிடி மந்திரியின் திட்டப்படி மன்னாரில் இருந்த சிங்கள மீனவ குடும்பங்கள் இங்கு குடியேற்றப்பட்டுள்ளனர். உண்மையில் பருவ ரீதியில் இங்கு வந்து மீன்பிடித்து உழைத்து விட்டு செல்கின்ற சாதாரண பாமர சிங்கள மீன்பிடியாளர்கள் இங்கு நிரந்தரமாகக் குடியேறவேண்டும் என்று சிந்திக்கவில்லை. ஆனால் அரசாங்கம் திட்டமிட்ட நடவடிக்கைகள் மூலம் அவர்கள் நிரந்தரமாகக் குடியேறுவதற்கு ஏற்ற வசதிகளை மூன்று விதத்தில் செய்கின்றது.

1) சிங்கள மீனவருக்கு முடிக்குரிய காணிகளை சொந்தமாக்கும் உரிமையை வழங்கியுள்ளது.

2) மீனவருக்குரிய விசேட கடன் சலுகைகளை தாமதிக்காமல் வழங்கியுள்ளமை.

3) இராணுவ பாதுகாப்பு அளிக்கின்றது.

இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் அரசாங்கம் தான் நினைத்ததை சாதித்தற்கு ஆதாரமாக 5000க்கும் அதிகமான சிங்கள மீனவர்களை இதுவரை குடியேற்றியிருப்பது விளங்குகின்றது. ஆரம்பத்தில் கொக்குத் தொடுவாய், கொக்கிளாய், செம்மலை போன்ற கிராமப்பகுதிகளிலேயே சிங்களக் குடியேற்றங்கள் விஸ்தரிக்கப்பட்டிருந்தன. ஆனால் இன்று சிலாவத்தை, மாத்தளன், சுண்டிக்குளி, அம்பலவன், பொக்கனை, சாலை பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்பட்டு வருகின்றது.

**விசேட ராணுவ ஏற்பாடுகள்:**

இந்த மீன்பிடி கிராமங்கள் அனைத்திலும் இராணுவ பாதுகாப்பு விஸ்தரிக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு பட்டினத்தில் ஒரு ராணுவ பாதுகாப்பு நிலையமும் (Army Camp) ஒரு பொலிஸ் நிலையமும் இருக்கின்றன. இவை சிங்கள மீன



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வியட்நாமின் அனுபவம் எமக்கு ஒரு பாடம்.

நமது மக்களின் போராட்டமானது உலகளாவிய மக்களின் நன்மைக்காகவும் ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும் கட்சி அரசியல் நோக்கைப் பூர்த்தி செய்வதற்கும் வியட்னாமிய மக்களின் புரட்சிகர சிந்தனைக்கு வித்திடவுமாக நடந்த தேசிய விடுதலை, தேசிய பாதுகாப்புப் போராகும் என்பது தெளிவாகும்.

தொடர்ச்சியான அரசியலாகும் போரின் போது, காலனித்துவ வாதிகள் நடத்திய நேர்மையற்ற எதிர்ப் புரட்சிக்கு மாருக நமது கட்சியின் புரட்சிகர அமைப்பு, நேர்மையான போரில் மக்களை ஈடுபடுத்தியதிலிருந்து நமது போரின் தன்மையைக் கண்டுகொள்ள முடியும்.

எமது மூதாதையர்களினுல் ஏற்படுத்தப் பட்ட போரானது ஒரு சோசலிச அமைப்பைக் கட்டி எழுப்பாத போதும்இது நேர்மையானவையாகவும்விலைமதிக்க முடியாத ஒன்ருகவும்இருந்தது. ஏனென்ருல் இது தேசிய விடுதலை பாதுகாப்புக்காகவும், நாட்டின் ஐக்கியத்திற்காகவும் ஏற்பட்டதொன்ருகவும் இருந்தது. நமது போர்கள் நிலப்பிரபுத்துவ வர்க்கங்களினுல் தலைமை தாங்கப்பட்ட போதிலும் இது தேசிய ஒருமைப்பாட்டிற்காகவும், ஆறுகளையும் மலைகளையும் கொண்ட எமது நாட்டின் பாதுகாப்பிற்காகவும், மக்களைப் பலப்படுத்தவும், கடைசித்தளம் இருக்கும்வரை எதிர்க்கும் மரபுக்குலத்தான நியாயமான, வழமையான இராணுவ நடவடிக்கைகளைக் கொண்ட மிலேச்சத் தனமான எதிர்ப்புப் போராகும்.

எமது சகாப்தத்தில் நடந்த விடுதலைப் போரானது உலகளாவிய பகுதிப் பாட்டாளி வர்க்கப் புரட்சியாகவே கருதப்படல் வேண்டும். ஏனெனில், எமது கட்சி புரட்சிகர அடிப்படைத் தேவைகளை அதாவது தேசிய சுதந்திரம், மக்கள் ஜனநாயகம், சோசலிசம் என்பவற்றை வரையறுத்துள்ளது. இவைதான் எமது மக்களால் பல்வேறுபட்ட காலகட்டங்களில் நடத்தப்பட்ட தேசியப்புரட்சிக்கான அரசியல் நோக்கங்களாகும். இந்தப் புரட்சி, புரட்சிகரப் போக்கானது மக்களின் தேசிய விடுதலையின் மூலமாக ஜனநாயக உரிமையையும் தேசிய விடுதலையிலிருந்து சோசலிசஅமைப்புக்கான இணைப்பையும் ஏற்படுத்தியதுடன் வியட்நாமியப் புரட்சியின் மூலம் உலகளாவிய புரட்சிக்கு வழிவகுத்தது. இதனை 'தலைவர் ஹோ-சி-மின் பின் வருமாறு கூறினுர்:

"நாட்டினைப் பாதுகாக்கவும், மக்களை விடுதலையடையச் செய்யவுமானவழியாக பாட்டாளி வர்க்கப் புரட்சி அமைகின்றது."

எமது மூதாதையரின் கால இராணுவ வழமையானது நேர்மையான போர்களாகவும் இருந்ததோடு ஒன்றில் நாட்டினைப் பாதுகாக்கவோ அல்லது விடுதலை செய்வதற்காகவோ ஏற்படுத்தப்பட்டபோர்களாகும்.

---

வர்களுக்கு போதுமான பாதுகாப்பை வழங்குகின்றது. சிலாவத்தை கிராமத்தில் இராணுவ முகாம் ஒன்றை அமைக்க அரசு திட்டமிட்டுள்ளமைக்கான தகவல் கிடைத்திருக்கின்றது. அது மட்டுமின்றி கடற்படையினரும் சிங்கள மீனவருக்கான பாதுகாப்பினை வழங்கி வருகின்றனர். முல்லைத்தீவு மீன்பிடி வலய பகுதிக்கு பாதுகாப்பை அளிக்கின்றனர்.

நாளாந்தம் கடற்கரைப் பகுதிகளில் இராணுவ ரோந்து நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. தமிழ் மீன் பிடியாளர்களை மட்டுமின்றி, மீன் பிடியில் ஈடுபடாத குடும்பங்களும் நாளாந்தம் அச்சத்துடனேயே வாழ்கின்றனர். பொக்கனை, மாத்தளன், மக்கள் இராணுவத்தினரின் ரோந்தினுலும், அட்டகாசத்தினுலும் அச்சம் கொண்டு பயந்து பீதியுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்ருர்கள். இக் கிராமங்களில் மக்கள் அடிக்கடி இராணுவத்தினுரால் தாக்கப் படுகின்றனர்.

இவ்வாறு தமது அன்ருட சீவனப்பாட்டை போக்கும் தொழிலுக்கு பேராபத்து வந்து விட்டதை உணர்ந்த நிலையில் இம்மக்கள் காணப்படுகின்றனர். இப்போது இவர்களின் மனநிலை எல்லாம் மது ஆக்கிரமிப்பாளர்களை விரட்டி அடித்து பாடம் புகட்டுவதிலேயே கருத்தாய் இருக்கின்றது. ○

www.tamilarangam.net



நிலப் பிரபுத்துவ வர்க்கங்களினால் தலைமை தாங்கப் பட்ட இந்த எழுச்சிகளும் போர்க ளும் எப்பொழுதும் நேர்மையான தலைமை யின்கீழ் தேசிய விடுதலைக்காக- தேசிய ஒற்று மைக்காக ஏற்படுத்தப் பட்டவையாகும். இவை நிலப் பிரப்புத்துவ அமைப்பின் கீழிருந்தா லும் அந்த இராணுவம் பின்வரும் வழமையான வைராக்கியத்தைக் கொண்டிருந்தது. எமது நாட்டின் மலைகளையும் நதிகளையும் பாதுகாத்துக் கொள்ளுங்கள். 'லை தொங்கீற்' (Ly Thuong Kiet) அனைத்து மக்களையும், போராட்டத்துக்கு ஒன் றிணையுங்கள். முற்றுகத்தாக்குவதற்கும் நீடித்து நிற்கக் கூடியதளத்தினை அமைக்கவும் மக்களின் நாட்டினைப் பாதுகாக்க சிறந்த வழி 'ட்ராங் ஹாங்டோ (Traug Hung Dao) பலத்தினை அதிகரி யுங்கள் இது சம்பந்தமாக நேர்மை, தாக்குபவர் களுடன் மனிதத் தன்மை என்றமுறையில் போரி டுங்கள். 'நுயென் ட்ராய்' (Nauyen Trai) (மேற்பட்ட ''லை தொங்கீற்'' ''ட்ராங்- ஹங் டோ'' ''நூயென் ட்ராய்' ஆகியோரே, அந்த தந்த கருத்துக்களைக் கூறினர்.)

எமது கட்சியினால் எடுத்துச் செல்லப் பட்ட தேசியப் போராட்டமானது வர்க்க அடிப்படை யிலும் தாய் நாட்டுக்கு விசுவாசமாக இருப்பதில் உலகளாவியதாகவும்காணப்படுகிறது. அத்துடன் இது வியட்னுமிய சமுதாயத்தின் தொழிலாள வர்க்கத்திற்கும் உழைக்கும் மக்களுக்கும், தேசம் முழுவதுக்குமான எழுச்சியாகவும் அகில உலகப் புரட்சியாகவும் காணப் படுகிறது. இதனுல் எமது தலைமையின் கீழ் ஏற்படுத்தப் பட்ட புரட்சி புதிய பலத்தினைக் கொண்டதாகவும் கூடவே தரமிக்கதாகவும் காணப் படுகிறது. எமதுஇராணுவ அமைப்பின் கீழ் காணப்படும் வெற்று வேடற்ற இந்தப் பல மானது எதிரியினால் தாக்குப் பிடிக்கமுடியாத ஒன்ருய் அமைந்தது.

எமது நாடு பின்னடைந்த பொருளாதார அமைப்பினைக் கொண்டிருந்த போதும் அத்து டன் அளவில் சிறியதாயிருந்த போதிலும், எம்மை எதிர்த்த மிகப் பெரிய நவீன போர்க் கருவிகளைக் கொண்ட பொருளாதார நாட்டிற் கெதிராக, நமது மக்களின் புத்திக் கூர்மை மிக்க தீரமான புரட்சிகர வரலாறுனது காலனித்துவ சக்திகளை எதிர்த்து வெற்றி கொள்ள வழிகளை வகுத்துக் கொடுத்தது.

எம்மை ஆக்கிரமிக்க முனைந்த பண்டை நவீன நாடுகளின் அளவும் சனத் தொகையும் எம்மைவிட அதிகமாயிருந்த போதிலும் இவற் றுக்கிடையே ஒரு முக்கிய வேறுபாடு இருந்தது. அதாவது பண்டை ஆக்கிரமிப்பாளர் நில வுடமை அமைப்பு எமமைப் போலிருந்தது. ஆனுல் தற்போதைய ஆக்கிரமிப்பாளர் ஏகாதி பத்திய வாதிகளாகவும் பிரதேச பரப்பளவி லும் சனத்தொகையிலும் அதிகமாகவும் நன்கு வளர்ச்சியடைந்த கைத்தொழிலமைப்பையும் பாரிய பொருளாதாரத்தையும் நவீன போர்க் கருவிகளையும் கொண்டிருந்தார்கள். மறுபுறத் தில் நாம் கட்டியெழுப்பிய சோசலிச அமைப் பானது எமது மூதாதையரைப் போலில்லாமல் எம்மை ஆக்கிரமிப்புச் செய்ய முனைந்தோரது துருபிடித்த சமுதாய அமைப்பைவிட மிகவும் சிறந்ததாயிருந்தது. நாம் கண்ட புதிய சமுதாய அமைப்பில் ஒவ்வொரு வியட்னுமியனும் அந்த சமுதாயத்தின் உரிமையாளனுகவே காணப் பட்டான். இவற்றைப் பாகுபடுத்திப் பார்க்கும் போது எமது சமுதாய அமைப்பிலிருந்த ஒவ் வொரு வியட்னுமியனும் சாதகமான நிலைமைகள் வளர்ச்சி என்பவற்றை உபயோகித்து போரில் வெற்றியீட்டியுள்ளதை நாம் காணலாம். இந்த அடிப்படையில் எண்ணிக்கையில் அதிகமான தும் பலமிக்கதுமான எதிரிகளைத் தோற்கடித்த தின் மூலம் எமது பாரம்பரிய இராணுவத்தை வளர்த்ததுடன் இந்த இராணுவ நவீனமயமான போர்க் கருவிகளுக்கெதிராக வெற்றியீட்ட எமது நேர்மையான அரசியலும் மக்களின் வீரம், புத்திக் கூர்மை என்பன உதவியது. எதிரியின் பலத்திற்கெதிராக பாவித்ததும் பாவிக்கப் பட வேண்டியதுமான அத்தியாவசியமான பலம், புத்திக் கூர்மை என்பவற்றின் அடிப் படையில் விநியோகமானது மக்கட்போரில் எதிரியை நசுக் குவதற்கான புதிய சகாப்தமாக மாறியது. ○



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

தும் வரலாற்று அனுபவங்களிலிருந்துமே திட்டமிட்டு செயலாக்கப்படும். எனவே இந்த முறையில் நாம் எழுந்துள்ள பிரச்சனையை ஆராய முற்படும்போது தெளிவான முடிவுகளுக்கு எம்மால் வரமுடியும்.

**ஈழத்தின் புறச்சூழல்- அகச்சூழல்**

அமெரிக்க ஏகாதிபத்திய நடவடிக்கைகளின் பின்னணியில் இன்று ஸ்ரீலங்கா முதலாளித்துவம் இன ஒடுக்குமுறை என்ற விளையாட்டைக் காட்டிக்கொண்டு ஈழவரை ஒடுக்கியவண்ணம் தன்னுடைய சுயரூபத்தை ஸ்ரீலங்காவினத்தினரிடத்தேயே மறைத்துக்கொண்டு வருகின்றது. ஸ்ரீலங்காவின் அரசியல் பெரும்பொறிக்குள் சிக்கிய நிலையிலுள்ளதை நாம் எப்போதும் தெளிவாகத் தெரிவுபடுத்திய வண்ணமே வந்திருக்கின்றோம். இன்று ஈழமும் தவிர்க்க முடியாத சார்பியல் நோக்கில் இந்தப் புயல் சிக்கலில் சிக்கித்தவிக்கின்றது. எனவே தான் இந்த அடிப்படைப் பின்னணியை உடைப்பதற்கான போராட்டத்தை நாம் நடாத்துவதன் மூலமே எம்மால் எமது இலட்சியத்தை வென்றடைய முடியும் என்கிறோம். அதை விடுத்து செயல்பட ஆரம்பிப்போமாகில் வெறும் சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டவர்களாகிக்கொள்வதுடன் ஈழவரையும் அழித்துக்கொண்டு கையாலாகதவர்களாக வெறித்து நிற்கவேண்டிவரும். இந்த சர்வதேச நாசகார தீயசக்திகளை தாக்கி விரட்ட எமக்கு ஆதரவான முற்போக்கான சர்வதேச நேச சக்திகளை திரட்டவேண்டியதும் அதற்கான காலம் கனியவேண்டி பொறுமையைக் கடைப் பிடிக்க வேண்டியதும் மிக முக்கியமானதும் அவசியமானதுமான இயக்க நடவடிக்கையாகும். ஆனாலும் ஈழத்தினுள் மக்களை ஒரு முகப்படுத்திய இலட்சியத்திற்காக வழி நடாத்தித் தயார் செய்யவேண்டிய வேலைத்திட்டங்களை நாம் பல விதங்களிலும் கைக் கொள்ள வேண்டும்.

இந்த நிலையில் ஈழ அகச் சூழலில் 'இன உணர்வு'தான் மேல் நோக்கி இன்று விகாரப்பட்ட நிலையிலுள்ளது எனவே இந்த உணர்வுள்ள மக்களினூடாகவே நாம் போராட்ட நடவடிக்கைகளின் தயாரிப்புக்களைச் செய்ய வேண்டி நிர்ப்பந்திக்கப்படுகின்றோம். இந்த நிலையில் மேலே எடுத்துக் கொண்ட சங்கங்களை நாடித்தான் இயக்கங்களை வடிவமைத்துக்கட்ட வேண்டிய அவசியமில்லாமல் போய் விடுகின்றது- அதாவது வெறும் இனவுணர்வின் மூலமே இயக்கங்களை வடிவமைக்கக்கூடியதாக இருக்கின்றது- இந்தமுடிவின் ஆதாரத்தை நிருபிக்க, இன்று நம்மவர் மத்தியிலுள்ள இயக்கங்களின் வரலாற்றை ஆராயும்போது தெரியவரும். இப்படியாக உருவாகிய இயக்கங்களில் போராளிகளாக இருந்து செயல்படுபவர்கள் ஈழப்போராட்டத்தில் எந்த அளவில் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளார்கள் என்பதையும் அவர்களது இலட்சியப் பார்வை எந்த மட்டம் வரையில் உள்ளதென்பதையும் இனி எதிர்காலம் உணர்த்தும் நிலையில் உள்ளது. வெறுமையான பேச்சளவில் சோசலிசக் கருத்துக்களை மக்களிடம் தெளித்துக்கொள்ளும் இவர்கள் எப்படியான நடவடிக்கைகளை மக்களிடம் மேற்கொள்கிறார்கள் என்பதை ஈழவர்கள் இனம் காணும் போதே முழுமையான சமத்துவ சமதர்ம ஈழம் உருவாவதற்கான மக்கள் புரட்சிக்கான வேலையாக அமையும்.

**வரலாறு தரும் அனுபவங்கள்**

விவசாயிகள் என்ற உணர்வடிப்படையில் சங்கங்கள் பெரிதளவில் இருக்கவில்லை. உருவாக்கப்பட்ட ஒரு சில சங்கங்களும் (உ—ம். கிளிநொச்சியில் உருவாக்கப்பட்ட) குறுகிய வட்ட செயல்பாடுகளாலும் ஏனோதானோ என்ற நிலையில் செய்த நடவடிக்கைகளாலும் (வெறுமையான துண்டுப்பிரசுரங்களை வெளியிடல்) அழிந்துபோய் விட்டன என்றே சொல்லலாம். அத்துடன் ஈழப் பிராந்தியங்களை உள்ளடக்கியதாக பரந்த அளவில் விவசாய- மீனவ சங்கங்கள் இருக்கவே இல்லை. இவற்றை முக்கியத்துவப்படுத்தி கடந்தகால ஈழஅரசியல் பிரமுகர்களோ கட்சி இயக்கங்களோ அரசியல் மயமாக்கும் நோக்குடன் அமைப்பை வலுப்படுத்த வேண்டி முயற்சிக்காதது பெரும் குறைகளாகும். இதற்கு அக்காலக் கட்டங்களில் அரசியலை





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கையாண்டுகொண்டிருந்தபிரமுகர்களின் வர்க்க நிலைச் செயல்பாடுகளையே காரணமெனச் சொல்லவேண்டும். உருவான ஒரு சில சிறிதளவான சங்க அமைப்புகளை மேம்படுத்தி வர்க்க உணர்வூட்டி அரசியல் மயப்படுத்தி முழுமையான ஸ்தாபனமாக வளர்த்தெடுக்க அந்த குட்டி பூர்சுவா அரசியல் பிரமுகர்களால் முடியவில்லை. இதற்கு உதாரணமாக சுருட்டுத் தொழிலாளர் சங்கத்தை எடுத்துக்கொள்ளலாம். இச்சங்கம் வர்க்க உணர்வுடன் கூலி, வேலை நேரக் குறைப்பு, வசதிகள் போன்ற ஆரம்பநிலைப் போராட்டங்களை நடாத்திய போதிலும் சரியான தொரு வழி நடாத்தலின்மையால் இப்போது இருந்த இடம் தெரியாமல் உருக்குலைந்து போய் விட்டது. அக்காலக்கட்ட அரசியல் பிரமுகர்கள் தமக்கே உரித்தான வெறும் இனவுணர்வை யூட்டும் பேச்சுக்களாலும் செயல் முறைகளாலும் இந்த தொழிலாள வர்க்க உணர்வுகளை மழுங்கடித்து அமைப்பின் பூர்வாங்க உணர்வையே சிதறடித்து விட்டனர்.

அடுத்து, கூட்டுறவு ஊழியர் பொதுச் சங்கம் சில வர்க்கப் போராட்டங்களை நிர்வாகத்துக் கெதிராகவும், அரச பழிவாங்கல்களுக்கெதிராகவும்நடாத்தியபோதிலும்அங்கேமிஞ்சிநின்ற சகலமட்ட ஊழல்களால் பொசுங்கிவிட்டன. இதில் அங்கம் வகித்த அனேகமான ஊழியர்கள் த. வி. கூ. சார்ந்த அரசியலில் சிக்கியிருந்ததால் மேலே போக முடியாதவாறு நசுக்கப்பட்ட போராட்டங்களையே செய்தனர். தமிழாசிரியர் சங்கம், எழுதுவினைஞர்சங்கம் போன்ற மத்தியதர வர்க்கத்தினருடைய அமைப்புக்கள் வெறும் மொழி வாதக் கண்ணோட்டங்களை வைத்திருந்ததால் பெரிய சாதனை ஒன்றையும் புரியாமல் ஈழத்தில் பரவலாக ஏற்பட்ட இனவுணர்வு வெள்ளத்துடன் இரண்டறக் கலந்து விட்டனர்.

தொழிற்சங்கம் என்ற ரீதியில் பார்த்தால் நிச்சயமாக மலையகப் பாட்டாளிகளுக்கான மலையகத் தொழிற்சங்கங்களை கவனித்தே ஆக வேண்டும் என்பது வெளிப்படை. இம்மக்கள் கூடிய வர்கக உணர்வுகளுடன் இருக்கிறார்கள். இதை நன்ருகக் கவனித்த முதலாளித்துவம் முதலாளிகளைத் தலைமைப்படுத்திய பல தரப்பட்ட அமைப்புக்களை உருவாக்கி பல தொழிற்சங்கங்களாக பிளவுபடுத்தியும், தெளிவான அரசியல் மயப்படுத்தாமலும், வர்க்க கூர்மை அடையாமலும் பாதுகாத்து வருகின்றது. சோவனிச ஸ்ரீலங்கா அரசு இம்மக்களுக்கெதிராக பலதரப்பட்ட ஒடுக்குமுறைகளைக் கையாண்டு, இழப்பதற்கு எதுவும் இல்லாத பாட்டாளி மக்களாக ஆக்கியதால் இம்மக்கள் மத்தியில் வலுவான தொழிற்சங்கங்கள் இன்றும் காணப்படுகின்றன. இச்சங்கத் தலைமையோ பூர்சுவாக்களின் கைகளில் காணப்பட்டமையாலும் சரியான இயக்க போராட்டத்திற்கு சாராமல் தனிமைப்பட்டதாலும் அவ்வப்போது எழுந்த எழுச்சிகள் அப்படியே அமுங்கிப்போய் விட்டன. இச்சங்கங்களை இயக்கங்கள் அரசியல் மயப்படுத்தாமல் விட்டது ஒரு பெரிய குறையாகும். ஸ்ரீலங்கா அரசின் 'இந்தியத் தமிழர்' என்ற பிரிவு இனவாதத்தில் எடுபட்டோ என்னவோ இன்றும் சில இயக்கங்கள் இந்த இழப்பதற்கொன்றுமே இல்லாத வர்க்க கூர்மையடைந்த பாட்டாளி ஈழவர்களை மையப்படுத்தும் போராட்டத்தை காணத் தவறுகின்னர். இந்தக் குறையானது நிகழ் காலத்தில் இயக்கங்களால் விடப்படும் பெரும் குறையாகும்.

அடுத்ததாக இலங்கை தேசிய ரீதியிலான சங்க அமைப்புகளை நோக்கலாம். வங்கி ஊழியர்கள், தபால்தந்தி ஊழியர்கள், தொழிற்சாலைகளில் காணப்படும் அமைப்புகள் போன்றவற்றை கவனிக்கும்போது என்னதான் பொதுவான வர்க்க உணர்வில் இவர்கள் செயல்பட்டாலும் கடந்தகால வரலாற்றில் இனவாதப் புயலினுல் இப்படியான அமைப்புக்கள் சிக்கிக் கொண்டு மனப்பூர்வமான செயலாக்கங்களில் ஈடுபடமுடியாமல் விடுபட்டுவிட்டன. இனவாத உணர்வின் தாக்கத்தை இந்த மாதிரியான அமைப்புகளில் இருந்தவர்களிடம் ஏற்பட்ட பெரிய மாற்றத்தினைக் கொண்டே அளவிட முடியும் என்றே சொல்லலாம்.

நாம் சொல்வது :

இந்நிலையில், ''என்ன செய்யவேண்டும்'' என்ற அத்தியாயத்தில் லெனின் சொன்ன கருத்துக்கள் சிலவற்றை நினைவில் கொள்வது சிறந்ததாகவே தோன்றுகின்றது.

''முதலாளிகளுக்கும் அரசாங்கத்திற்கும் எதிராக தொழிலாளிகள் நடத்தும் போராட்டத்தைவிட சமூக- ஜனநாயகத்தின் அரசியல் போராட்டம் எவ்வளவோ விரிவானது- அதே போல இந்தப் போராட்டத்துக்காகப் புரட்சிகர மான சமூக- ஜனநாயகக் கட்சியின் அமைப்பு தவிர்க்கமுடியாதவாறு தொழிலாளிகளின் அமைப்பிலிருந்து வேறுவகையைச் சேர்ந்த தாய் இருந்தே தீரவேண்டும். தொழிலாளிகளின் அமைப்பு முதன்முதலாக தொழிற்சங்க அமைப்பாக, இரண்டாவதாக முடிந்த அளவில் பரவலாக, மூன்ருவதாக நிலைமைகள் அனுமதிக்கிற அளவிற்கு பொதுவானதாய் இருக்க வேண்டும். மறுபுறத்தில் புரட்சியாளர்களின் அமைப்பு புரட்சி நடவடிக்கைகளை தம் முழு நேர வேலையாகக் கொண்ட நபர்களையே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# "இருபதாம் நூற்றுண்டின் நவீன அடிமைத்தனம்"

சென்ற 6. 8. 84 அன்று மாலை சென்னை தேவநேயப்பாவாணர் நூலக சொற்பொழிவுக் கூடத்தில், 'ஈழம் குடிபெயர்ந்தோர் அமைப் புச்சங்க'' த்தினரால் ஒழுங்கமைக்கப்பட்டுவெளி யிடப்பட்டது ''இருபதாம் நூற்றுண்டின் நவீன அடிமைத்தனம்'' என்ற ஈழ மலையக மக்களின் வரலாற்று நூல். அங்கே-

''கூட்டணியினரை அணுகிக்கேட்டோம். அவர்கள் கூறினர்கள்- முதலில் 'தமிழ் ஈழம்' பெறுவோம், அதன்பின்னர் மலையக மக்களை எல்லைக்காவலராக கொண்டுவந்து குடியமர்த்து வோம். அப்படியானல் அங்குள்ள இஸ்லாமி யரின் நிலை என்ன என்று கேட்டதற்கு அவர் கள் தனித்துவமான நாடுவேண்டும் என்ருல் பின்னர் போராடிப் பெறட்டும் என்று கூறிவிட் டார்கள்- இந்தப் பிற்போக்குத்தனமான பார் வையால்தான் இவ்வளவு காலமாக மலையகத் தமிழ் மக்கள் கஷ்டத்துக்குள்ளாகியுள்ளார்கள். ஆனல் இந்த இளம் தோழர்கள் ஒரு சரியான இடது சாரிக் கொள்கையில் எல்லோரையும் அணுகிச் செயற்பட்டு அணிதிரட்டி போராட் டத்தை முன்னெடுத்துச் செல்கிருர்கள். இந்தப் போராட்டத்தின் எடுத்துக்காட்டாகத்தான் இந்நூல் வெளிவந்துள்ளது'' என்று தமது தலைமையுரையில் கூறிய பேராசிரியர் இளவரசு அவர்கள் தொடர்ந்து-

''இந்நூலின் பெயர் 20ம் நூற்றுண்டின் நவீன அடிமைத்தனம். இதில் நவீன அடி மைத்தனம் என்ருல் என்ன என்பதை முகவு ரையில் தெளிவு படுத்துகிருர்கள். உலக வரலாற்றின் எந்தவொரு பக்கங்களிலும் அரசி யல் சாசனத்தின்மூலம் முகங்கள் பறிக்கப்பட்ட தாயில்லை. 48ம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடைந்த அன்று இந்தமலையக மக்கள் குடியு ரிமை பறிக்கப்பட்டு அரசியல் சாசனத்தின் மூலம் அவர்கள் வாக்குரிமை பறிக்கப்பட்டு தனக்கென்று எதையும் உருவாக்க முடியாத விலங்குகளாக அடிமைகளாக்கப்பட்டு துன் புறுத்தத்தான் பயன்படுத்தப்பட்டார்கள் என்றும், அவர்களின் உரிமைகள் அனைத் தையும் பறித்து அந்தச் சட்டத்தின் மூலம் இந்த மக்களை எந்த நாட்டையும் சாராத

---

முதன்மையாகவும் முக்கியமாகவும் கொண்ட தாக இருக்க வேண்டும். அமைப்பு சம்பந்தமாய் முழு நேரப் புரட்சியாளர்கள். இவர்கள் மாணவர் மத்தியில் இருந்து உருவாகி வளர்ந்தவர்களா அல்லது தொழிலாளிகள் மத்தியில் இருந்து உரு வாகி வந்தவர்களா என்பது பற்றிய கவலை யில்லை.

மேற்கண்ட புரட்சிப்புரவலனின் சிந்தனைப் படியே அமைப்புக்களை நாம் இனம் கண்டு அமைப்பதுடன் அவற்றின் இலட்சியக் குறிக் கோளுக்கான போராட்ட நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டியதே அவ்வவ் அமைப்பின் பணியாகும். ஒரு புரட்சி இயக்கம் ஸ்தாபன ரீதியாக கட்டியெழுப்பப்பட வேண்டியதற்காக பலவிதமான அமைப்புகளாக தகுந்த முறை களில் அணுகுவது இயல்பானதே. இன்றைய காலக்கட்டத்தில் அந்தந்தப் பிரிவு மக்களை ஒரு முகப்படுத்திய போராட்ட நிலைக்குக்கொண்டுவர வேண்டி தனித்தனி அமைப்புகளை செயல்பட வைக்கவேண்டிய அவசியம் இல்லாமல் போய் விட்டது. இந்த அளவில் ஈழவர்களின் புறச் சூழல் அகச் சூழல் கெடுபிடிகள் அவர்களை இனவுணர்வு மேலோங்கிய நிலையில் போராடத் தள்ளி விட்டது. நாம் இவ்வினவுணர்வூடாக போராட்டத்தை இட்டுச் சென்று கொண்டு வர்க்க ரீதியான அரசியல் மயப்படுத்திய தொடர்ந்த போராட்டத் தயாரிப்புக்கு இட்டுச் செல்ல வேண்டும்.

'இனவாதம்' கொண்டு பார்ப்பவர்களால் உண்மைகளைக் காணமுடியாமல் போய்விடுவது யதார்த்தமானது. உண்மையென்ன வென்ருல் இலட்சியத்திற்கு தகுதியுள்ள மிகப்பல நபர்களை சமுதாயம் உண்டாக்கித் தருகிறது. நாம் தான் அவர்கள் அனைவரையும் பயன்படுத்தா மல் இருக்கிறோம். இவ்விஷயத்தில் நம் இயக் கம் மிகவும் நெருக்கடியான பரிணமிப்பை பெற்று வளர்ந்து மிகக் குறைந்த அளவிலாவது முழுநேர புரட்சியாளருக விளங்கும் வர்க்க வுணர்வு பெற்ற அரசியல்மயப்படுத்தப்பட்ட மக்கள் திரளினரை கூர்மையான நெறிப்படுத் தல் மூலம் ஈழத்தை வென்றெடுத்தே தீரும். எமது ஈழத்தின் சோசலிசப்புரட்சியான- 'சமத் துவ சமதர்ம ஈழம்' என்ற இலக்கை அடையும் போது உலக வரலாற்றில் சோசலிசப்புரட்சிக் கான புதியதொரு அத்தியாயம் படைக்கப் படும். ○



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாடற்றவர்கள் என்ற முத்திரையைக் குத்தியுள்ளார்களே! இதுதான் உலகில் எந்த நாட்டிலும் இல்லாத ஒன்றாகும்- இதைத்தான் இப்புத்தகத்தில் 20ம் நூற்றாண்டின் நவீன அடிமைத்தனம் என்று கூறுகிறார்கள். அதிகமாகப் பாதிக்கப்பட்ட இம்மக்களை உள்ளடக்கியதுதான் போராட்டம் என்ற உணர்வு அங்குள்ள இளைஞர்களிடம்- EROSல் தொடங்கிய அந்த உணர்வு- மற்றைய அணிகளிடம் ஊடுருவியது என்று சொல்வேன்'' என்றும் குறிப்பிட்டு தமது பேச்சினது ஆழப் பார்வையைத் தெளிவு படுத்தினார்.

இந்நூலை வெளியிட்டு உரையாற்றிய தோழர் பாண்டியன் அவர்கள், ''இதில் நான் ஒரேயொரு மூலத்தை நீங்கள் சிந்திக்க வேண்டும் என்பதாலும் இந்நூலாசிரியர் மோகன்ராஜ் சிந்திக்க வேண்டுமென்பதாலும் கூற விரும்புகின்றேன். குடிபெயர்ந்தோர்- வெள்ளையர் ஆட்சிக்காலத்தில் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு அழைத்துச் (இழுத்துச்) செல்லப்பட்ட இவர்கள் இப்போது சிறிமா- சாஸ்திரி ஒப்பந்தத்தின் பேரில் இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு வந்துள்ளனர். இலங்கையில் மட்டுமல்ல மலையகமக்கள் எட்டடி சதுர 'லயன்'களுக்குள் வாழ்வது; ஏன்? இந்தியாவிலும் தேயிலைத் தோட்டங்களிலும் அதேபோன்ற லயன்களில்தான் வாழ்கின்றார்கள். இந்தப்பிரச்சனையை இலங்கை அரசு தீர்க்கவில்லை என்பது போக இந்திய அரசு கூடத்தான் இதனைத் தீர்க்கவில்லை இதற்கு அடிப்படைக் காரணம் சமூக அமைப்பை மாற்றியமைக்கும் வரையில் இப்பிரச்சனையைத் தீர்த்து வைக்கமுடியாது. இதற்கு தீர்வு காணாமல்; இலங்கை அரசு மலையக மக்களை மலைகளில் இருந்து இறக்கி கடலில் விட்டுவிட்டு அதே வெற்றிடத்தை சிங்கள மக்களுக்குக் கொடுப்பதாலும் தீராது. ஏனெனில் இதே சமூக அமைப்பில் வாழப்போகும் சிங்கள மக்களின் பிரச்சனை இன்று இல்லாவிட்டாலும் என்றாவது கிளம்பத்தான் செய்யும். இலங்கை சிறிதாகையால் வெடிப்பு உடனடியாகத் தெரிந்து விட்டது. இந்தியா பெரிதாகையால் வெடிப்பு இருந்தும் வெளியே தெரியவில்லை. இதற்காக இலங்கையில் நடப்பதனை நியாயப்படுத்தக்கூடாது இதற்குத் தீர்வு காண என்ன செய்யவேண்டும்? இதற்கான தீர்வை விடுதலை இயக்கங்கள் உலகிலுள்ள இடதுசாரி நாடுகளில் நடந்ததைப் போன்ற வழியினைப் பின்பற்ற வேண்டும். ஆனால் இதற்கான இடதுசாரித்தீர்வு இந்தியாவில் உருவாவதற்குப் பதிலாக இலங்கையில் துயரக்குரலாக வெடித்து இந்தியாவில் ஒப்பாரிக் குரலாகக் கேட்கின்றது.


இலங்கையானாலும் சரி இந்தியாவானாலும் சரி உரிமைகளைப் பெற உண்மையான இயக்கங்களை எப்படி உருவாக்குவது- எவ்வாறு வர வேண்டுமென்பதையும் அதைப்பெறுவதற்குரிய ஒற்றுமையையும் குறைந்த பட்சத்திலாவது உருவாக்க வேண்டியது இன்றுள்ள கடமை. அது பற்றிய கருத்து இப்புத்தகத்தில் இல்லாவிட்டாலும் நாம் கவனித்துக்கொள்ள வேண்டியது அவசியம்.

மலையகத் தமிழன், யாழ்ப்பாணத் தமிழன் ஆகியோரின் பிரச்சனை ஈழத்தில் மட்டுமல்ல இந்துமா கடலில் உள்ள அத்தனை நாடுகளின் பாதுகாப்பும், இந்தியாவிலுள்ள 70 கோடி மக்களின் அரசியல் சுதந்திரத்தோடு பின்னிப் பிணைந்துள்ளது. எனவே, ஏகாதிபத்தியத்தின் பலிக் கடாக்களாக தமிழ்மக்கள் பலி பீடத்தில் வைக்கப்பட்டுள்ளார்கள். அதைத் தீர்ப்பதற்கு என்ன வழி என்பதை ஒன்று சேர்த்துப்பார்த்தாலன்றி அதை மீட்பதற்கு வேறு வழியில்லை என்பது தெளிவு'' என்ற கருத்துக்களை முன் வைத்தார்.

சிறப்புரையாற்றிய தோழர் செந்தில்நாதன் அவர்கள், இந்நூலாசிரியர் இடதுசாரிகள் பற்றிய விமர்சன ஆய்வின்போது ஆத்திரமான மனோபாவனையுடனான பார்வையைச் செலுத்தியிருக்கக் கூடாது என்று குற்றம் சாட்டி, புத்தகம் பற்றிய விமர்சன ரீதியான உரையை ஆற்றினார்.

மேலும் இந்நூல் வெளியீட்டு நிகழ்வில் முகவை இராசமாணிக்கமும் ஒரு சிற்றுரை ஆற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. ●


---



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புகலிடம் தேடி...



தமது மண்ணிலே அகதிகளானோர், இராணுவ வெறியால் வீடுகள் இழந்தோர் புகலிடம் தேடி வருகின்ற வழியில் மூத்தவர், இளையவர், இவருடன் சேர்ந்து சின்னஞ் சிறுவர்கள்...



இப்படங்கள் வல்வெட்டித் துறைக்கு அருகில் 'வதிரியில்' எடுக்கப்பட்டவை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்